
# மாலைமதி

19.8.2002
ரூ 5.00
ஐந்து ரூபாய்





# இவ வேற மாதிரி

## 1

'DEEPA WEDS ARUN' என்கிற எழுத்துக்கள் - தெர்மோகோல் பின்னணியில், மேல் விழுந்த வெளிச்ச உபயத்தில் ஜிகினாவாக மின்னின. அணைந்து அணைந்து ஒளிர்ந்தன. 'தொடர்ந்து ஒளிர விடணும்ப்பா' என்று யாரோ சொன்னார்கள்.

மண்டப வாசலிலேயே கல்யாணக் களை.

**பெ. நாயகி**

வரிசையாகக் கார்கள்... மாட்டிஸ், சாண்ட்ரோ, ஜென், இண்டிகா என்று அந்த ஊருக்கு அதிகப்படியான தரம் வாரியாக நின்றன. போனால் போகிறது என்று சில மாருதிகளும் அம்பாஸிடர்களும்.

மணப்பெண் போல் அலங்கரிக்கப்பட்டிருந்தது ஒரு சாண்ட்ரோ மட்டும். அது தனியாக நின்றிருந்தது.

மாப்பிள்ளை வந்து இறங்கிய கார் அது.

வாசலில் வெளிச்சத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்தன குழல் விளக்குகள். கூடவே சப்தத்தையும் இறைத்துக் கொண்டிருந்தன ஒலி பெருக்கிகள்.

மண்டபத்தினுள் நிறையக் கூட்டம். நாற்காலிகள் கிட்டத்தட்ட நிரம்பியிருந்தன. மனப்பூர்வமான சந்தோஷம் இருக்கிறதோ இல்லையோ; முகத்தளவிலாவது புன்னகையை விரிய விட்டிருந்த ஜனங்கள்.

பெரிய ஹால் அது. சுற்றிலும் சுவர்களில் ராட்சத மின்விசிறிகள் ஓடியபடி காற்றை அள்ளி வீசிக் கொண்டிருந்த போதிலும், மேக்-அப்பினாலும் கூட்டத்தின் சூட்டினாலும் ஒருவிதக் கசகசப்பு இருக்கத்தான் செய்தது.

பேசிக் கொண்டிருந்தவர்கள் பத்து செகண்டுக்கு ஒருமுறை கைக்குட்டையினால் கழுத்துப் பகுதியையும் புறங்கைகளையும் அழுந்தத் துடைத்தபடி தான் பேசினார்கள்.

“பொண்ணு நல்ல கலர் சார்!”

“பையனும் நல்லாத் தானே இருக்கான்? பொருத்தமான ஜோடி!”

“அதென்ன சார், ரிஸப்ஷன் அப்படின்னாலே பொண்ணு குஜராத்தி ஸ்டைல்ல தான் சேலை கட்டணும்னு ஒரு எழுதாத விதியே உருவாயிட்ட மாதிரி இருக்கு?”

“அதானே...”

“நான் கடைசியா கலந்துக்கிட்ட ஏழெட்டுக் கல்யாணங்களில், ஒண்ணு ரெண்டு தவிர்த்து, மற்ற எல்லாத்துலயும் பொண்ணு ரிஸப்ஷனுக்கு இந்த மாதிரி தான் தலைப்பு மாற்றி சேலை கட்டிட்டு நிக்குது!”

ஜனங்கள் குரலை உயர்த்தித் தான் பேசிக் கொள்ள வேண்டி இருந்தது. சக மக்களின் பேச்சு ஒருபுறமும் மெல்லிசைக் கச்சேரிக் குழுவினரின் பாட்டு ஒருபுறமும் அந்த இடத்தையே சப்த சங்கமமாக்கி இருந்தன.

நடு நாயகமான மேடையில்... தீபா வித்தியாசமான அலங்காரங்களுடன்

உட்கார்ந்திருக்க, அருகில் இருந்த நாற்காலியில் அருண்... ரிஸப்ஷன் என்றால் ஆண் உடுத்தியே தீர வேண்டிய கோட், டை, ஃபுல் சூட்டுடன்! வடக்கத்திக் காரர்கள் குளிர் காலத்தில் கல்யாணத்துக்குக் கோட் அணிகிறார்கள் என்றால் அதற்குக் காரணமும் உண்டு. பத்துப் பதினைந்து டிகிரி குளிரில் 'பாரத்' என்ற பெயரில் மாப்பிள்ளையை இரவில் குதிரையில் உட்காரவைத்தோ, திறந்த காரில் உட்கார வைத்தோ பெண் வீடு நோக்கி அழைத்துப் போவார்கள். சில கிலோமீட்டர்களுக்காவது இந்தப் பயணத்தின் நீளம் இருக்கும். அது மட்டுமின்றி, அங்குள்ள கல்யாணத்தின் முக்கியக் கட்டமாக 'வரமாலா அணிவித்தல்' நிகழ்வுமே திறந்த வெளி மேடையில் தான் பெரும்பாலும் நிகழும். அப்படியான நிகழ்ச்சி அமைப்புகளில் அந்தக் குளிரில் கோட் இல்லை என்றால் மாப்பிள்ளை மட்டுமல்ல, உடன் வருபவர்களுமே விறைத்துப் போவார்கள்.

இங்கே கல்யாணம் வைகாசியில் நடந்தாலும், காற்றுக்கு வழியே இல்லாத மண்டபத்தினுள் ரிஸப்ஷன் ஏற்பாடுகள் வைத்தாலும், மாப்பிள்ளை கோட், சூட்டுடன் தான் புழுங்கிய படி நிற்க வேண்டும். தமிழ்நாட்டின் பெரும்பாலான ஆண்கள் அன்று தான் வாழ்க்கையில் முதன்முதலாக கோட் அணிவதே வழக்கம். அநேகமான வீடுகளில் அதற்குப் பிறகு மீண்டும் அதனை வெளியே எடுப்பது கூடக் கிடையாது.

அருணும் அதற்கு விதி விலக்கில்லை என்பது போல் கோட்டும் அதற்கு மேல் அணியப்பட்ட மாலையுமாக அமர்ந்திருந்தான்.

தீபா - அருண் இருவருக்குமே இது கொஞ்சம் கஷ்டமான அனுபவமாகத் தான் பட்டது.

உட்காருவதும், அடுத்த சில விநாடிகளில் அருணின் அப்பா யாரையோ இழுத்துக் கொண்டு வந்து அறிமுகப் படுத்தி வைக்கும் போது - எழுந்து நின்று, அவர் சொல்வது ஒலி பெருக்கிகளின் இரைச்சலில் கொஞ்சமும் காதில் விழவில்லை என்றாலும் புரிந்த மாதிரி - தலையைத் தலையை ஆட்டியவாறு வரவழைத்த புன்னகையுடன் வணங்குவதுமான கடமை முடிந்து மீண்டும் உட்கார... மறு நிமிடமே தீபாவின் அப்பா யாரையோ இழுத்துக் கொண்டு மேடைக்கு வருவார்...

"இதென்னங்க புதுப் பழக்கமா இருக்கு! முகூர்த்தமே நாளைக் காலையில் தான். இன்னிக்கே பொண்ணு மாப்பிள்ளையை ஜோடியா நிப்பாட்டி வச்சு ரிஸப்ஷன் நடத்திட்டிருக்காங்க?"

கூட்டத்தில் ஒருவர் கிசுகிசுத்தார்.

"நீங்க எந்த உலகத்துல இருக்கீங்க? இப்போ இதெல்லாம் ரொம்ப

சகஜமாயிருச்சுங்க", என்று அவரைக் கண்டிக்கும் குரலில் அடுத்தவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஆக்சுவலா கல்யாணத்துக்கு மண்டபம் பிடிக்கும் போது முதல்நாள் சாயங்காலம் நாலு மணிக்கெல்லாம் மண்டபத்தை ஒப்படைச்சிடறாங்க. அன்னிக்கு நைட் பொழுதை ஏன் வேஸ்ட் பண்ணணும்? ரிஸப்ஷனை வச்சிடறது'இப்போ பழக்கமாயிட்டு வருது. எப்படியும் கல்யாணத்தோட ஒரு பகுதியா சேர்த்து ரிஸப்ஷனும் நடத்தத் தான் வேண்டி இருக்கு. எதற்கு ரெட்டைச் செலவு? இப்போ பாருங்க... இந்த மாதிரி அரேஞ்ச்மெண்ட்டால எவ்வளவு வசதி? நாளை ஒர்க்கிங் டே வேற. கல்யாணத்துக்கு வர முடியாதவங்க இப்போ ரிஸப்ஷனுக்கே வந்துட்டுப் போயிட முடியும் பாருங்க!"

"அதை விட இன்னொரு லாபமும் இருக்கு - மாப்பிள்ளை வீட்டு ஆளுங்களுக்கு..."

"என்ன?"

"கல்யாணச் செலவு தான் பெண் வீட்டோடது. ரிஸப்ஷன் செலவு பிள்ளை வீட்டைச் சேர்ந்தது தான். கல்யாணம் இன்னும் முடியலைங்கறதுனால பிள்ளை வீட்டுக்கு ரொம்ப பயந்து எல்லா உதவியும் செய்வாங்க பெண் வீட்டாருங்க. இப்போ பாருங்க, ரிஸப்ஷன் பிள்ளை வீட்டு ஏற்பாடு தான். ஆனா, பையனோட அப்பாவும் அம்மாவும் எவ்ளோ அலட்சியமா இருக்காங்க, பொண்ணோட வீட்டார் எவ்ளோ டென்ஷனா அலையறாங்கன்னு. இது தாங்க உள் குட்டு"

"என்னவோ போங்க, இப்போ மேடையில் நிக்கற ரெண்டு பேரும் மாப்பிள்ளை பொண்ணுன்னு சொல்ல முடியுமா?"

"என்னங்க சார், மேடை மேல போய் கை குலுக்கி விஷ் பண்ணிட்டு ஃபோட்டோ வீடியோவுக்கெல்லாம் போஸ் கொடுத்திட்டு வந்திருக்கற அத்தனை பேரும் அதை ஒத்துக் கொண்டதாத் தானே அர்த்தம்?"

"மத்தவங்களை விடுங்க, அந்தப் பொண்ணு இப்பொ சகஜமா ஃபீல் பண்ணும்னு நினைக்கறீங்களா?"

கூட்டத்தில் எங்கோ ஒருவர் இப்படி நினைத்தது போல், தீபா ஒருவிதமான தர்மசங்கடத்தில் தான் இருந்தாள்.

அருகில் அமர்ந்திருப்பவன் அந்நிய ஆணா, அல்லது கணவனா என்கிற குழப்பத்தில் இருந்தாள். கணவன் தான் என்று பலமுறை மனதினுள் சொல்லிக் கொண்டாலும், உள்ளூர ஏதோ ஒருவித அந்நியத்துவம் பட்டது. உட்கார்ந்து உட்கார்ந்து எழும் போதெல்லாம், அவனுடைய தோள் இவளுடைய தோள் மீதில் உரசும் போதும், படும் போதும் உள்ளுக்குள் உடம்பு குறுகியது போல்

உணர்ந்தாள். அறிமுக வேளைகளில் அவன் திரும்பும் போது அவ்வப்போது சில விநாடிகள் பார்க்க நேர்ந்தாலும், உடனுக்குடன் முகம் திருப்பிக் கொள்ள வேண்டி இருந்ததாலும், இதே கணத்தில் பல நூறு கண்கள் தன்னை மொய்ப்பதாக உணர்ந்து கொண்டிருந்தாலும் அவனுடைய முகம் மனதில் பதியவில்லை.

நடுநடுவே நிமிரும் போதெல்லாம் மேடைக்கு நேர் எதிரே நாற்காலியில் அமர்ந்தபடி தன்னைச் சூழ்ந்துள்ள சம வயதுப் பெண்களிடம் தீபாவைக் காட்டிக் காட்டி ஏதோ பேசிக் கொண்டிருந்த அவளுடைய வருங்கால மாமியார் சரோஜா கண்ணில் பட்டாள். அதனாலேயே பக்கவாட்டில் திரும்பி அருணை நன்றாகப் பார்த்து உள்வாங்கிக் கொள்ளும் தைரியம் அவளுக்கு வரவே இல்லை.

அவனுக்கும் அவளுக்கும் இரு மருங்கிலும் நாற்காலிகளுக்குப் பின்னாலும் நின்றிருந்த அவரவர் வீட்டு சம வயது உறவு நண்பர்கள் கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு அபத்தமாகப் பேசிக் கொண்டிருந்ததும் ஒருவிதமான அவஸ்தையாகத் தான் இருந்தது.

அருண் குடித்துக் கொண்டிருந்த கோக் பாட்டிலைப் பாதியில் பிடுங்கிய குறும்புக்கார நண்பர்கள் தீபாவிடம் கொடுத்துக் குடிக்கச் சொன்னார்கள். “இனிமே வாழ்க்கைல எதுன்னாலும் நீங்க ரெண்டு பேரும் பகிர்ந்துக்கணும்.”

தீபாவுக்கு தர்ம சங்கடமாக இருந்தது. ஏனோ அதனை வாங்கிக் குடிக்க மனம் வரவில்லை.

அந்த பாட்டிலை மீண்டும் பறித்துக் கொண்டான் அருண். “அதெல்லாம் நாளை தாலி ஏறினப்புறம் தான்” என்றான். தீபாவுக்கு நிம்மதியாக இருந்தது. அருண் மீது கொஞ்சம் மரியாதை வந்தது.

எதிர் மேடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மெல்லிசைக் கச்சேரிக் குழுவினர் சமீபத்திய திரைப்படங்களின் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தனர்.

“ஏ.ஆர். ரஹ்மான் பாடல்கள்னா எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அவருடைய ஹைடெக் ரிச் மியூஸிக்கை எல்லாம் இந்த ஒண்ணரையணா மேடைக் கச்சேரி ஆளுகளால கொண்டு வர முடியுமா? ஏன் கொல்றாங்க? வேற பாடல்களைப் பாடித் தொலைக்கக் கூடாதா?” என்று மெல்லக் குனிந்து அருண் தீபாவிடம் சொல்ல, தீபாவுக்கு வியர்த்தது.

கமெண்ட் மாதிரி சொல்கிறானா அல்லது அப்பா ஏற்பாடு செய்திருக்கும் இந்தக் கச்சேரி ரொம்பவும் சப்ஸ்டாண்டர்டு என்று குத்திக் காட்டுகிறானா என்று புரியாமல் விழித்தாள். ‘இந்த ஏற்பாட்டுச் செலவு உங்களுடையது தானே? நீங்க அதிகப் பணம் கொடுத்திருந்தால் எங்கப்பா அந்த ரஹ்மானையே

ஏற்பாடு செய்து விட்டுப் போகிறார். பணமும் அளந்து தருவீர்கள். உங்க வீட்டு வேலையான இந்த ஏற்பாட்டையும் எங்கப்பாவே செய்ய வேண்டும்; அதில் குறையும் கண்டுபிடிப்பீங்க. அதுக்குப் பேர் தான் பிள்ளை வீட்டுக் காரங்க, இல்லையா?' என்றெல்லாம் பேசுக முடியுமா? அவர்கள் தந்த பணத்துக்கு மேலாக அதிகப்படி பணம் செலவழித்து அப்பா இன்னும் நல்ல கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறானோ? அல்லது அவன் சாதாரணமாகச் சொன்ன ஒரு வாக்கியத்துக்கு நான் தான் தேவை இல்லாமல் பெரிய அர்த்தங்கள் எடுத்துக் கொண்டு குழம்புகிறேனோ?

என்ன சொல்வதென்று தெரியாமல் தவித்தாள்.

"ஏய்! இத்தனை பேர் கவனிச்சிட்டிருக்கோம், அங்கே என்ன ரகசியம்?" என்று ஒரு பெண் அருணைச் சீண்ட, "எங்கே? நம்ம ஆளு தான் பிடியே கொடுக்க மாட்டேங்குதே" என்று கொஞ்சம் உரத்த குரலிலேயே அருண் சொன்ன போது கூட, அதில் தொனித்தது கேலியா, எரிச்சலா என்று தெரியவில்லை தீபாவுக்கு.

இன்னும் எவ்வளவு நேரம் இப்படி உட்கார்ந்திருக்க வேண்டுமோ என்று நினைத்தாள். இதென்ன கொலு மாதிரி என்று கூட எரிச்சல் வந்தது. என்ன ரிஸப்ஷன்? யாருக்காக இப்படி உட்கார்ந்திருக்கிறோம்? ஒவ்வொருவராக வந்து வேடிக்கை பார்ப்பதற்கும் காட்சிப் பொருளாட்டம் இதென்ன விதமான சடங்கு சம்பிரதாயம்?

தீபா வேலை பார்க்கும் ஆஃபீஸின் மேனேஜர் மனைவியுடன் வந்தார். தீபாவின் அப்பா வேலாயுதமும், அம்மா சுகுணாவும் அவரை மரியாதையுடன் மேடைக்குக் கூட்டி வந்தார்கள்.

அருணுக்கு அறிமுகப்படுத்தினார்கள். மேனேஜர் சாந்தாராமின் மனைவி தீபாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு வாழ்த்துச் சொன்னாள். அவர் அருணிடம், "நீங்க ரொம்ப லக்கி. எங்க ஆஃபீஸிலேயே மோஸ்ட் பியூட்டிஃபுல் அண்டு மோஸ்ட் இண்டலிஜெண்ட் கேர்ள் தீபா தான்" என்று புகழ, அருண் பெருமையாகச் சிரித்துக் கொண்டான்.

அடுத்த அரைமணி நேரத்தில் பந்தி ஏற்பாடுகள் குறித்த பரபரப்பு - அந்த ஹாலில் தொற்றிக் கொண்டது. உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்ததிலும் வலிய சிரித்துச் சிரித்து கும்பிட்ட களைப்பிலும் தீபாவுக்கு நிஜமாகவே பசித்தது.

கூடவே தீபாவை இன்னொரு பயமும் தொற்றியது.

அருணுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்று சொல்லாமல், அவன் சாப்பிட்ட இலையில் தான் சாப்பிட வேண்டும் என்று சொல்லி விடுவார்களோ என்கிற எண்ணம் வர... உள்ளங்கை வியர்த்தது.

மாலைமதி 19.08.2002

அப்படிச் சாப்பிடச் சொன்னால் தான் என்ன? கிட்டத்தட்ட கணவன் தானே என்று சமாதானம் செய்து கொள்ள முயன்றாலும், உள்மனம் ஏனோ காரணம் தெரியாமல் அலட்டிக் கொண்டே இருந்தது.

"டெ ண்ணு - மாப்பிள்ளை எப்போ சாப்பிடறது?" என்று, யாரோ கேட்டது காதில் விழுந்தது.

"என்ன அண்ணி பசிக்குதா?" என்று கேட்ட சிந்துவை சிநேகத்துடன் பார்த்துப் புன்னகைத்தாள் தீபா.

சிந்து - அருணின் தங்கை.

எல்லாம் கிட்டத்தட்ட முடிந்து கூட்டமும் கலையத் தொடங்கி இருந்த தருணத்தில் அருணையும் தீபாவையும் இறங்கி வரச் சொன்னார்கள்.

அருண் எழுந்து தீபாவைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுத் திரும்பி நடந்தான். இரண்டு அடிகள் வைத்திருப்பான். எது தடுக்கியது என்று தெரியவில்லை, சட்டென்று தடுமாறியவன், மேடையின் விளிம்பில் இருந்து அப்படியே சரிந்து கீழே விழ- அங்கே இருந்த நான்கடி உயரக் குத்து விளக்கின் நுனி அவனுடைய நெற்றிப் பொட்டில் ஆழப் பதிய... குரல் ஏதும் எழுப்பும் முன்னரே, என்ன - ஏது என்று யாரும் பார்க்கும் அவகாசம் கூட இன்றி கைகால்கள் பரப்பிய நிலையில் உயிரை விட்டிருந்தான்.

# 2

வேலாயுதம் - சுகுணாவுக்கு ஒரே மகள் தீபா. பையன்களும் கிடையாது. வேலாயுதம் அரசுத் துறையில் இருந்தும் லஞ்சம் வாங்காத அதிகாரியாக வாழ்க்கையை ஓட்டுபவர். ஒரே பெண் என்பதாலும், அவளும் படிப்பு விஷயத்தில் அதிகப்படி செலவு வைக்காதபடி வளர்ந்ததாலும் சுகுணா, ஆடம்பரமான ஆசைகள், பக்கத்து வீட்டுப் பெண்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்தல் போன்ற வழக்கங்கள் இல்லாத பெண்ணாக இருந்ததாலும், வேலாயுதத்தின் நேர்மைக்கு சோதனை வரவில்லை. அவரால் தன்னுடைய வருமானத்திலேயே பெண்ணின் திருமணத்துக்குத் தேவையான பணத்தையும் சேர்த்துவிட முடிந்தது.

தீபா டிகிரி முடித்தபிறகு அருகில் இருந்த கம்ப்யூட்டர் சென்ட்டரில் எம்.எஸ். ஆஃபீஸ் கோர்ஸ் படித்து வைத்துக் கொண்டதால், உடனடியாக ஒரு தனியார் நிறுவனத்தில் கம்ப்யூட்டர் ஆபரேட்டராக வேலை கிடைத்துப் பார்த்து வந்தாள். சம்பளம் அதிகமில்லை என்றாலும், வீட்டில் சும்மா இருப்பதற்குப் பதிலாக இப்படி வெளியே போய் வந்தால் அவளுடைய அதீத

கூச்ச சுபாவம் கொஞ்சமாவது மாறும் என்றுதான் வேலாயுதம் அவள் வேலைக்குப் போய் வர சம்மதித்திருந்தார்.

திடீரென்று ஏற்பட்ட சம்பந்தம் தான் இது.

அவளுடைய திருமண ஏற்பாடுகள் பற்றி வேலாயுதமும் சுகுணாவும் அப்போதுதான் பேசத் தொடங்கி இருந்தார்கள். சொல்லி வைத்தாற்போல் ஈஸ்வரமூர்த்தி அணுகினார்.

தீபாவைப் பார்க்க வந்த முதல் வரனே அருண் வீட்டார் தான்.

ஆனால், பெண்ணைப் பார்க்க அருண் வரவில்லை.

பெற்றோர் பார்த்து ஓகே சொன்னால் போதும் என்று சொல்லி விட்டான் என்று அறிய வந்த போது வேலாயுதம் நெகிழ்ந்து போனார், இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளையா என்று.

ஈஸ்வரமூர்த்தி, சரோஜா, அருணுடைய தம்பி சூரியா, தங்கை சிந்து ஆகியோர் பார்க்க வந்தார்கள். சிந்து திருமணமானவள். அவளுடைய கணவன் நீலகண்டன் - கோயமுத்தூரில் இன்ஜினியராக இருக்கிறான்.

எல்லோருக்கும் எல்லாமும் பிடித்துப் போனது.

ஒரு மாதத்துக்குள் திருமணம் முடித்து விட வேண்டும் என்று ஈஸ்வரமூர்த்தி அபிப்ராயப்பட்டார். அவருடைய ஆஸ்தான ஜோஸியரின் கட்டளையாம்.

அவசர அவசரமாக ஏற்பாடுகள் நடந்தன.

கல்யாண மண்டபம்தான் பிரச்னை ஆனது. 'இரண்டு நாட்களுக்கு மண்டபம் பிடித்து விடுங்கள்; அன்று மாலையே ரிஸப்ஷனும் வைத்து விடலாம்' என்று ஈஸ்வரமூர்த்தி சொல்லி இருந்தார். எல்லா முகூர்த்த நாள்களுக்கும் முக்கிய மண்டபங்கள் எல்லாம் புக் ஆகி இருந்தன. ஒரே ஒரு மண்டபத்தில் மட்டும் ஒருநாள் இடையில் ஒரு நிகழ்ச்சி கேன்ஸல் ஆகி இருந்ததால் கிடைத்தது. ஒரு நாள் என்றால், முதல் நாள் சாயங்காலம் நான்கு மணியில் இருந்து... மறுநாள் மாலை அதிகபட்சமாக ஐந்து மணி வரைக்கும் மட்டுமே என்கிற உறுதியான கண்டிஷனுடன். அதுவும் ஈஸ்வரமூர்த்தி எதிர்பார்த்த மாதிரி இல்லாமல் நாற்பது நாள் தள்ளித் தான் கிடைத்தது.

வேலாயுதம் ஈஸ்வரமூர்த்தியைச் சந்தித்து பிரச்னையைச் சொன்னார்.

"நோ ப்ராப்ளம் சம்பந்தி. நீங்க எதுக்கு ஒர்றீ பண்றீங்க? அன்னிக்கே மண்டபத்தை புக் பண்ணிடுங்க."

"இல்லை சம்பந்தி, ரிஸப்ஷன் அன்னிக்கே வைக்கணும்னு அபிப்ராயப் பட்டீங்களேன்னு..."

"ஏங்க, இவ்வளவு பெரிய ஊர்ல உங்களுக்கு மட்டும் மண்டபம் கிடைக்க மாட்டேங்குதாமா? எதாவது சாக்கு சொல்லணுமேன்னு இழுத்தடிக்காதீங்க" என்றாள் சரோஜா.

"அடடே அப்படில்லாம் இல்லைம்மா. எங்க ஏற்பாடான கல்யாணத்தை விட, உங்க ஏற்பாடான ரிஸப்ஷன் சிறப்பா நடக்கணுமேன்னு தான் என் எண்ணமெல்லாம்."

"அதென்ன, உங்க வீட்டு ஏற்பாடு எங்க வீட்டு ஏற்பாடுன்னு இப்படிப் பிரிச்சுப் பேசறீங்க. உங்களால முடியாதுன்னா சொல்லிடுங்க, நாங்க பார்த்துக்கறோம்."

வேலாயுதம் பதற்றத்தை மறைத்துக் கொண்டு தனக்குப் பேசத் தெரியவில்லையோ என்கிற சந்தேகத்தில் வாயடைத்துப் போனார்.

"சரோஜா! இப்போ அவர் என்ன சொல்லிட்டார்? அவரை எதுக்கு பதற்றப்படுத்தற? நம்ம வேலையையும் சேர்த்துத் தானே பார்த்திட்டிருக்கார்?" என்று அவர் சார்பில் பேசினார் ஈஸ்வரமூர்த்தி.

"நல்லா இருக்கே கதை! பொண்ணு வீட்டுக்காரங்கன்னா இதெல்லாம் செய்யணும் தான். ஆரம்பத்திலயே இவ்வளவு கறாரா இருந்தா போகப்போக என்னென்ன பண்ணுவீங்களோ! பயம்மாத் தான் இருக்கு."

வேலாயுதம் மிரண்டு போனார்.

"அப்படி எல்லாம் இல்லம்மா."

"அப்புறம் என்னவாம்? இப்படி ஒண்ணொண்ணுக்கும் எங்க கிட்டயே வந்து கேட்கறது நல்லாவா இருக்கு? இதை அப்பாவித் தனம்னு எடுத்துக்கறதா... அல்லது விவரம்னு எடுத்துக்கறதா? நாளைக்கு ஏதும் குறைன்னா உங்களைக் கேட்டுத் தானே செஞ்சேன்னு சொல்லித் தப்பிக்கறதுக்கா?"

வேலாயுதம் குறுகிப் போனார்.

ஈஸ்வரமூர்த்தி அவரை வெளியே தள்ளிக் கொண்டு போனார். "என்ன சம்பந்தி! உங்களுக்கு விவரமே பத்தாது. இந்த மாதிரி மேட்டர் எல்லாம் பொம்பளையாள் முன்னாடியா பேசறது?"

"அதுக்கில்லைங்க, வந்து..."

"ஒண்ணும் வரவும் வேண்டாம், போகவும் வேண்டாம். அவள் பேசினதை மனதில் வச்சுக்காதீங்க. அருண் அவளுடைய செல்ல மகன். மூத்த மகனுடைய கல்யாணத்துல எந்தத் தாயும் எந்தக் காம்ப்ரமைஸும் பண்ணிக்க சம்மதிக்க மாட்டா. அவளுக்கு எங்கே தான் திட்டமிட்டிருக்கற மாதிரி ரிஸப்ஷன்

நடத்த முடியாமப் போயிடுமோங்கற டென்ஷனை உண்டாக்கி விட்டீங்க. நான் சமாளிச்சுக்கறேன். நீங்க மண்டபத்தை விட்டுடாதீங்க. முதல்நாள் சாயங்காலமே கிடைச்சிடுதில்லையா? அப்போதே ரிஸப்ஷன் வச்சுக்கலாம். இப்போ அந்த மாதிரி முதல் நாளே ரிஸப்ஷன் வைக்கறதெல்லாம் சகஜமாயிட்டு வருது. சரோஜாவை நான் கன்வின்ஸ் பண்ணிக்கறேன். நீங்க மற்ற ஏற்பாடுகளைக் கவனிங்க. சரியா?"

வேலாயுதம் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

"அதோட இன்னொரு விஷயம்; இனிமேல் ஏதும் கேட்கணும்னா, என்னிடம் தனியா கேளுங்க. அவள் முன்னிலையில் வேண்டாம்"

"சரிங்க"

அப்படி ஏற்பாடான ரிஸப்ஷன் இப்படி முடியும் என்று யாரும் கனவாவது கண்டிருப்பார்களா?

அருண் கீழே விழவும் மொத்தக் கூட்டமும் ஸ்தம்பித்தது. "அருண்" என்று அலறியவாறு சரோஜா முன்னால் பாய்ந்து கீழே விழுந்து அவ்னை அப்படியே அள்ளிக் கொள்ள... கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்தார் ரிஸப்ஷனுக்கு வந்திருந்த டாக்டர் ஒருவர்.

அருணின் மூக்கில் இருந்தும் காதிலிருந்தும் எட்டிப் பார்த்த ரத்தமே அவருக்கு நிலைமையை விளக்கி விட்டது.

இருந்தும், அவனுடைய கையை எடுத்து நாடி பார்த்து, கண்களைப் பிரித்துப் பார்த்து விட்டு உதடு பிதுக்கினார்.

"ஸாரி" என்று எழுந்தார்.

ஓவென்று குரலெடுத்து அழ ஆரம்பித்து விட்டாள் சரோஜா.

"அண்ணா..." என்று சிந்துவின் குரலும் எழ... கூட்டம் பரபரப்பானது.

"பாவி மகளே! உன் நிலைமை இப்படி ஆச்சே" என்று தீபாவைக் கட்டிக் கொண்டு சுகுணா அழுதாள்.

நெருங்கிய ஆண்கள் கண்ணீரை அடக்கிக் கொண்டு மற்ற ஏற்பாடுகளைக் கவனிக்க விரைய, வேலாயுதம் மேல்துண்டை வாயில் பொத்திக் கொண்டு விசும்பத் தொடங்கினார்.

எல்லோரும் ஸ்தம்பித்து நின்ற அந்த அசாதாரண கணத்தில் ஈஸ்வரமூர்த்திக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை சட்டென்று வேலாயுதத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "ஏதோ நடந்தது நடந்து விட்டது. நீங்க ஒண்ணும் உடைந்து போய் விட வேண்டாம். என்னிக்கு

இருந்தாலும் தீபா தான் எங்க வீட்டு மருமகள். அருண் போயிட்டா என்ன? எனக்கு சூரியான்னு இன்னொரு மகனும் இருக்கான். இந்தத் துக்கத்தில் இருந்து எல்லோரும் தெளியட்டும். அந்த சுப காரியம் நடந்தே தீரும்" என்றார் அமானுஷ்யமான குரலில்.

மொத்தக் கூட்டமும் உறைந்து போனது.

அருணின் உடம்பை அப்படியே அள்ளிக் கொண்டு வாசலில கா.ருக்கு விரைந்தார்கள்.

எல்லோரும் அதன் பின்னே ஓட, வேலாயுதத்துக்கு அவர்களின் பின்னே ஓடுவதா, ஸ்தம்பித்து சிலையாக நிற்கும் மகளைக் கவனிப்பதா என்று ஒரு கணம் புரியவில்லை.

யாரோ பிடித்து உலக்கி விட.... நிலைமை புரிந்தவராக தானும் ஓடினார்.

சுகுணாவும் தீபாவின் வயது உறவுப் பெண்கள் இருவரை அழைத்து அவர்களிடம் அவளை ஒப்படைத்து விட்டு விரைந்தாள்.

வீடு வந்து சேர்ந்த பிறகும் தீபா பேசவே இல்லை.

அவளுக்கு தன்னுடைய நிலைமை என்னவென்றே புரியவில்லை.

திருமணம் ஆனவளா? ஆகாதவளா? ஆகியும் ஆகாதவளா?

ஆனவள் என்றால் இப்போது விதவையா?

இறந்தவன் அவளுடைய கணவன் தானா?

கணவன் என்றால் அவன் இறந்த மாத்திரத்தில் ஏன் அழுகை உடைப்பெடுக்கவில்லை? ஓடிப்போய் அவனை அள்ளிக் கொண்டு மடியில் கிடத்தி அழுதாளே அவனுடைய அம்மா, அதுபோல் தானும் ஏன் ஓட முடியவில்லை?

அப்படிச் செய்துதான் இருக்க முடியுமா?

'என்னங்க' என்று அலறியபடி நானும் அவனைத் தொட்டுத் தூக்கி இருந்தால் அது செயற்கையாக இருந்திருக்காதா? என்னுடைய அந்தச் செயலுக்கு சமூக அங்கீகாரம் தான் கிடைத்திருக்குமா?

ரொம்பவும் தான் அலட்டிக்கறா என்று பார்ப்பவர்கள் நினைக்க மாட்டார்களா? தாலி கூட ஏறவில்லை; அதற்குள் அப்படி அழுது புலம்புவது சாத்தியமா?

அப்படிப்பட்ட அங்கீகாரம் எனக்கு உண்டு என்றால், அந்தப் பெரிய கூட்டத்தில் எனக்கு ஆதரவாக ஆறுதலாக ஏன் யாரும் என்னை

நெருங்கவில்லை? எல்லோரும் அவர்கள் பின்னால் தானே ஓடினார்கள்? என்னுடைய வழி உறவினர்கள் கூட இப்போது அங்கே தானே போயிருக்கிறார்கள்?

ஒருவேளை நானும் ஓடி- இருக்க வேண்டுமோ?

இப்போது கூட அவனை அவன் வீட்டுக்கு அள்ளிக் கொண்டு போயிருக்கிறார்கள், நான் இங்கே அலங்காரங்களைக் கூடக் களையாமல் உட்கார்ந்திருக்கிறேன்...

அழுகையும் வராமல் ஏதோ அடைத்துக் கொண்டிருந்தது.

எந்தத் தப்பும் செய்யாமல் எனக்கு மட்டும் தண்டனை கிடைப்பது மாதிரியான என்ன நிகழ்வு இது....?

"சும்மா சிலை மாதிரி உட்கார்ந்திருக்காதே தீபா. கொஞ்சம் உடைந்து அழு. எல்லாம் சரியாயிடும்" என்று தேற்ற முயன்று உலுக்கினார்கள் தோழிகள்.

"என்னை கொஞ்சம் தனியா விடறீங்களா? உடை மாற்றணும்" என்றாள் தீபா.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பயம்!

அதீத துக்கத்தில் ஏதாவது செய்து கொண்டாள் என்றால்...

உறவுக்காரப் பெரியவர்கள் வந்து அவர்களிடம் இவளை பத்திரமாக ஒப்படைத்து விடும் வரை டென்ஷன் தான்.

"நாங்க இருக்கிறோம். சும்மா இங்கேயே உடை மாற்று" என்றபடி நகைகளையும் அலங்காரங்களையும் கலைக்க உதவினார்கள்.

தீபாவுக்கு மீண்டும் கலக்கமாக இருந்தது.

நான் இனிமேல் சாதாரணமாக உடைகளை அணிய முடியுமா? அலங்காரங்கள் செய்து கொள்ள முடியுமா? சிரித்துப் பேச முடியுமா?

புருஷனைப் பறி கொடுத்தவள் மாதிரியா இருக்கிறாள் என்று பேச மாட்டார்களா?

நான் பறி கொடுத்தது என் புருஷனைத் தானா?

ஐயோ!

குழப்பத்தில் தலையே வெடித்து விடும் போல் இருந்தது.

சூடாகக் காபி குடித்தால் தேவலை போல் இருந்தது.

கேட்க பயமாக இருந்தது.

பாரு! புருஷன் செத்து ரெண்டுமணி நேரம் கூட ஆகவில்லை, இவளுக்குக் காபி கேட்குது என்று இவர்களே நினைப்பார்களோ? இவர்கள் நினைப்பார்களோ இல்லையோ என் மனசாட்சியே கேட்டுக் கொல்லும் போலிருக்கிறதே!

மறுபடியும் புருஷன்!

# 3

சரோஜா மாலையுடன் தொங்கிக் கொண்டிருந்த அருணின் பெரிய அளவு படத்தையே வெறித்தபடிப் பார்த்துக் கொண்டிருந்தாள். வீடு சூன்யமானது போலிருந்தது.

அருண் சம்பந்தமான எல்லாச் சடங்குகளும், கருமாதி வகையறாக்களும் நடந்து கொண்டிருந்த வரையில் யாராவது கூட்டமாக நடமாடிய மாதிரி இருந்தது. இப்போது எல்லாம் முடிந்து அனைவரும் போய் விட்ட பிறகு வீட்டில் ஈஸ்வரமூர்த்தியும் சரோஜாவும் சூர்யாவும் சிந்துவும் மட்டுமே இருந்தனர்.

நீலகண்டன் கருமாதி முடிந்து போகும் போது சிந்துவை ஒருவாரம் பத்து நாட்களுக்கு அம்மாவுக்கு ஆதரவாக இருந்து விட்டு வா என்று சொல்லிப் போயிருந்தான் ஈஸ்வரமூர்த்தியின் வேண்டுகோளுக்கு இணங்கி.

எப்படியும் சிந்து இப்போது இருந்தே ஆக வேண்டிய வேறொரு கட்டாயமும் ஏற்பட்டிருந்தது.

அது தான் ஈஸ்வரமூர்த்திக்கும், சரோஜாவுக்கும் இடையிலான சண்டை.

அருண் இறந்த இடத்திலேயே வைத்து ஈஸ்வரமூர்த்தி எல்லோர் முன்னிலையிலும் தீபா எப்படியும் எங்க வீட்டு மருமகள்தான் என்று சொல்லியது சரோஜாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அப்போது மகன் பிணமாக மடியில் கிடந்த துக்கத்தையும் மீறி அவரை எரித்து விடுவது போல் அவள் பார்த்தது பரபரப்பில் இருந்த மற்றவர்களுடைய கண்களில் படவில்லை.

ஆனால், அருணின் உடலை எரியூட்டி விட்டு கனத்த நெஞ்சுடன் ஈஸ்வரமூர்த்தி மயானத்திலிருந்து திரும்பியதுமே சரோஜா கேட்டாள், "யாரைக் கேட்டு நீங்க சூரியா கல்யாணத்தை முடிவு செஞ்சீங்க?"

அவள் குரலில் இருந்த உஷ்ணத்தை - ஆவேசத்தை ஈஸ்வரமூர்த்தியால் உணர முடிந்தது. அவற்றின் அந்த நேர நியாயத்தையும் அவர் உணர்ந்திருந்ததால் பதில் சொல்வதைத் தவிர்த்தார்.

"என்னைக் கேட்காமல் முடிவெடுப்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; நான் கேட்கும் கேள்விகளுக்குக் கூட பதில் சொல்வதில்லை என்றும் முடிவு பண்ணியாச்சா?"

"வேண்டாம் சரோஜா. இப்போ நாம் இந்த டாபிக் பத்திப் பேச வேண்டாம். நீ அதீத துக்கத்தில் இருக்கிறாய். உன் சோகம் எனக்குப் புரியுது..." என்று பேசப் போனவரைத் தடுத்தாள் சரோஜா.

"இந்த டயலாக் அடிக்கிற வேலை எல்லாம் வேண்டாம். என் கேள்விக்கு பதில் வேணும். சூரியா கல்யாணத்தைப் பத்தி நீங்க எப்படி அந்த சபையில் சொல்லலாம்?"

"சரோஜா! இப்போ தான் ஒரு மகனை எரியக் கொடுத்துட்டு வந்து நிக்கறேன். இந்த மேட்டர் பேசற நேரமா இது?"

"ஓஹோ, என் மகன் செத்து விழுந்த அந்த நிமிஷமே, ஏதோ அதுக்காகவே காத்திருந்த மாதிரி அடுத்த மகனுக்கு சம்பந்தம் பேசின நேரம் மட்டும் பொருத்தமான நேரமோ?"

ஈஸ்வரமூர்த்தி காதுகளைப் பொத்திக் கொண்டார்.

"அந்த தரித்திரம் பிடிச்ச முண்டையைப் பெண் பார்த்திட்டு வந்ததில் இருந்தே எதுவும் சரியில்லை. அவ பக்கத்தில் உட்கார்ந்த மறு நிமிடமே என் மகன் செத்து விழுந்திட்டான். தாலி மட்டும் கட்டி இருந்தான்னா என்னென்ன ஆகியிருக்குமோ! ஏதோ சனியன் விட்டதுன்னு இருக்க மாட்டாம, அவளையே அடுத்த மகனுக்குக் கட்டி வச்சு இதே வீட்டுக்கு மருமகளா கூட்டிட்டு வருவேன்னு கங்கணம் கட்டிட்டு இருக்கீங்க. ஏன், குடும்பத்தோட நாசமாப் போயிடலாம்னு திட்டமா? இப்போ சொல்றேன் கேட்டுக்கோங்க, அந்த நினைப்பெல்லாம் உங்க மனசுல ஏதாவது ஓரத்துல இருந்துதுன்னா அடியோட அழிச்சுருங்க. அந்த விளங்காமுஞ்சியோட அப்பனும் ஆத்தாளும் அன்னிக்கு ஏன் கூடவே வந்தாங்க? அந்தக் கிழவன் எதுக்கு அப்புறமும் நம்ம வீட்டுக்கு வர்றான்? அவன் கிட்டயும் தெளிவாச் சொல்லிடுங்க. எதாவது கற்பனையில் எப்படியும் நம்ம பொண்ணை இந்த வீட்டில் தள்ளிடலாம்னு நினைச்சிட்டிருக்கப் போறான். இன்னொரு தடவை அந்த ஆளை இந்த வீட்டில் பார்த்தேன்னா நான் மனுஷியா இருக்க மாட்டேன், ஆமா..."

நல்ல வேளையாக இந்த உரையாடல் அவர்களின் அறையில் நடந்தது.

வெளியார் காதுகளில் விழுந்தால் என்ன ஆகும்? குறிப்பாக வேலாயுதம் கேட்க நேர்ந்தால் எவ்வளவு துடித்துப் போவார் என்று நினைக்க ஈஸ்வரமூர்த்தியின் உடம்பு ஒருகணம் ஆடிப் போனது.

மகன் இறந்த துக்கத்தை விடவும் இந்தச் சிக்கலை எப்படிச் சமாளிப்பது என்கிற கவலை மேலோங்கியது.

"சரி சரோஜா! உன் கிட்ட கெஞ்சிக் கேட்டுக்கறேன். இப்போ நாம் இருவரும் பேசிக்கிட்ட விஷயம் நமக்குள்ள இருக்கட்டும். வீட்டுல இருக்கற சொந்தக்காரங்க காதுகளுக்குப் போக வேணாம். விசேஷம் முடிந்து எல்லோரும் போகும் வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரு. எந்த முடிவும் உன் விருப்பத்துக்கு மாறா நடந்திடாது. போதுமா?" என்று வேண்டிக் கொண்டார்.

சரோஜா அவருக்கு வாய் மொழியாக உத்தரவாதம் ஏதும் தரவில்லை என்றாலும் அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொண்டவள் போல் நடந்து கொண்டாள்.

பொதுவாகவே அவளுடைய குணம் அதுதான். தன்னுடைய கருத்துகளையோ முடிவுகளையோ சபையில் வெளிப்படையாகச் சொல்லவே மாட்டாள். ஈஸ்வரமூர்த்தி மூலம்தான் அவை மற்றவர்களுக்கே தெரியவரும். அந்த வீட்டின் எந்த ஒரு முடிவும் அவளுடையது தான் என்பது மிக நெருங்கியவர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியாது.

அவள் அமைதியாக இருந்தாலும் ஈஸ்வரமூர்த்திக்குள் உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது.

ஒருநாள் சூரியாவைத் தனியாக அழைத்துப் போய்ப் பேசினார்.

"சூரியா! அந்த சபையில் நான் அந்த மாதிரி சொன்னதில் உனக்கு வருத்தம் எதுவும் இல்லையே"

"எனக்கு ரொம்ப ஷாக்கா இருந்ததுப்பா. நீங்க ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டிருந்தீங்கன்னு நினைக்கறேன்."

"ஆமாம் சூரியா! நடந்த அசம்பாவிதத்துக்கு நானும் ஒரு வகைல காரணமோன்னு கொஞ்சம் உறுத்தல். ஏன்னா, ஜாதகம் பார்த்த போது உன் அண்ணன் ஜாதகத்துல ஒரு பெரிய கண்டம் இருக்கு. இந்தப் பொண்ணு ஒருமாதத்துக்குள் அவனுக்கு மனைவியா ஆனால்தான், அவளுடைய மாங்கல்ய பலத்தில் அவன் நீடுவாழ்வான்னு ஜோஸியர் சொன்னார். அஃப்கோர்ஸ் இவ்வளவு பெரிய கண்டமா இருக்கும்னு நினைச்சுப் பார்க்கலை. உங்கம்மாவுக்கும்

இது நல்லாத் தெரியும். அதனாலேயே கல்யாணத்தை அவசரமா வைக்கச் சொன்னது நாம் தான். ரிஸப்ஷன் பின்னால வச்சிக்கலாம்னு உங்கம்மா கிட்ட சொன்னேன். அவள் தான் சம்பந்தி செலவிலேயே அதையும் முடிச்சிடலாம்னு டிரிக் பண்ணினா. எல்லாமே நாம் சொன்னபடி நடந்தார் அந்த மனுஷன். இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்து அந்தப் பொண்ணு செயலறியாம சிலையா திகைச்சு நின்ன காட்சி என் மனசில் அறைந்தது. சூரியா நினைச்சுப் பாரு... அந்தப் பொண்ணுக்கு இனிமே வேற இடத்தில் கல்யாணம் ஆக வாய்ப்புகள் இருக்கா? அவள் கன்னியா, விதவையா, வாழாவெட்டியான்னே இனம் பிரிக்க முடியாமல் போயிட்டாளே! உங்கண்ணன் அவளுக்குத் தாலி கட்டின மறு நிமிஷம் போய்ச் சேர்ந்திருந்தான்னா கூட அவளுக்கு இந்த வீட்டு மருமகள்னு ஒரு ஸ்டேட்டஸாவது கிடைச்சிருக்கும். லீகலா உன் அண்ணனின் வாரிசுன்னு ஒரு ரைட் கிடைச்சிருக்கும். அதுல அவளுக்கு ஒரு ஃபுட்டிங் கிடைச்சிருக்கும். இப்போ எதுவுமே இல்லையே, இது பாவமில்லையா? உங்க அண்ணன் தாலி கட்டலியே ஒழிய பக்கத்துல உட்கார்ந்தானே. ஃபோட்டோ வீடியோவெல்லாம் எடுத்திருக்கோமே. சபையில் அத்தனை பேர் வாழ்த்தி இருக்காங்களே. அவளை மருமகள்னு உங்கம்மா ஒத்துக்குவாளா? இவ்வளவும் தான் அந்தக் கணத்தில் என் மனசில் ஓடிச்சு சூரியா! அதனால தான் அப்படி ஓர் அறிவிப்பைச் சொன்னேன்..." என்றபடி அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டார்.

"வருத்தப்படாதீங்கப்பா! உங்க எண்ணம் ரொம்ப உயர்வானது. இப்படி ஓர் அப்பாவுக்கு மகனாப் பிறக்க நான் பெருமைப்படணும். உங்களுக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்ங்க" என்றான்.

"ரொம்ப தாங்க்ஸ்டா. உன் கருத்தைக் கேட்காமலே அப்படிச் சொன்னது தப்போன்னு அதுக்கப்புறம் கொஞ்சம் சங்கடப்பட்டேன். இப்போ அது சரியாயிடுச்சு. உங்கம்மா ரொம்ப கோபத்துல இருக்கா. அவ சாந்தமாகிற வரைக்கும் நீ ஏதும் இது விஷயமா அவளிடம் பேசிடாதே."

சூரியா சிரித்தான்.

"காலம் எல்லாப் புண்ணையும் ஆத்தும்னு நம்பறேன். ஒருநாள் உங்கம்மா இறங்கி வராமலா போயிடுவா?"

ஈஸ்வரமூர்த்தி அந்த மட்டோடு நிற்கவில்லை.

மகளையும் மருமகளையும் தனியே சந்தித்து அவர்களுடைய கருத்தையும் கேட்டார்.

அவர்கள் இருவருக்கும் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான உறுதியான கருத்தும் இருக்கவில்லை.

"அந்தப் பொண்ணு பாவம்தான் மாமா. உங்க எண்ணம் உயர்வானது தான். ஆனா, எதுக்கும் நீங்க அத்தையை ஒருவார்த்தை கேட்டுட்டு முடிவெடுத்திருக்கலாம் என்றான் நீலகண்டன்.

"ஆமாம்ப்பா! தீபாவை முதன்முறையா பார்த்தப்பவே எனக்கு ரொம்பவும் பிடிச்சுப் போனது நிஜம். ஆனா, இன்னிக்கு நிலைமையை நினைச்சுப் பாருங்க. அம்மா தினமும் புலம்பிட்டிருக்கா. அந்தப் பொண்ணை தரித்திரம் அதுஇதுன்னுட்டு சுரிச்சிக் கொட்டறா. அம்மாவை நினைச்சாத்தான் கொஞ்சம் பயம்மா இருக்கு."

ஈஸ்வரமூர்த்தி கூட்டி விழுங்கினார்.

"நானும் இதைத் தான் சொல்லணும்னு நினைச்சேன் மாமா."

"மாப்ள! நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்."

"சொல்லுங்க மாமா."

"இந்த விசேஷம் எல்லாம் முடிஞ்சப்புறம் சிந்துவை ஒரு பத்துநாளைக்கு இங்கே விட்டுட்டுப் போக முடியுமா? இப்போ இவள் அம்மாவை என்னால் தனியா ஃபேஸ் பண்ண முடியாதுன்னு நினைக்கறேன்."

நீலகண்டனுக்குச் சிரிப்பு வந்தது. தோள்களை உயர்த்தி சம்மதம் தந்தான்.

# 4

ஷாம்பவி விடுப்பு முடிந்து அலுவலகம் வந்தாள்.

அங்கே ஒருவர் மாற்றி ஒருவர் தீபாவின் நின்றுபோன கல்யாணம் பற்றிய கதைகளைச் சொன்னார்கள்.

அதிர்ந்தாள்.

நேரே சாந்தாராமின் அறைக்குப் போனாள்.

"ஏன் சார்! இருபது நாளாச்சு. தீபா இன்னுமா வேலைக்கு வரலை?"

"எப்படிம்மா வருவா?"

"ஏன், வேலையை ரிஸைன் பண்ணிட்டாளா?"

"இல்லை."

"நீங்க யாராவது அவளை வீட்டில் போய்ப் பார்த்தீர்களா?"

"இல்லை" என்றார் தயக்கமாக.

"அப்புறம் எப்படி சார் வருவா? இந்த மாதிரி சமயங்களில் தான் சார் ஆஃபீஸ் ஃப்ரண்ட்ஸோட பங்கே ரொம்ப அவசியம். அவள் துக்கத்தில் இருந்து மீண்டு சகஜ வாழ்க்கைக்கு வர்றது நம்ம கையில் தான் இருக்கு."

"நீ சொல்றது நூத்துக்கு நூறு சரி ஷாம்பவி' இன்ஃபாக்ட் நான் உன்னைத் தான் எதிர்பார்த்திட்டிருந்தேன். உனக்கே தெரியும், நான் தீபா மீது எந்த அளவுக்கு ஒரு தகப்பன் மாதிரி பிரியம் வச்சிருந்தேன்னு. அவளுக்கு இப்படி நடந்தப்புறம் அவள் வீட்டுக்குப் போய் அவளைப் பார்க்கற மனோ தைரியம் இல்லாமல் போச்சும்மா. அங்கே போனா உடைஞ்சிருவேனோன்னு பயம்."

"நான் போயிட்டு வர்றேன் சார்" என்று கிளம்பினாள். "அவளை இங்கே கூட்டி வர்றது என் பொறுப்பு."

ஷாம்பவி தீபாவின் சக கம்ப்யூட்டர் ஆபரேட்டர். நுனிநாக்கு ஆங்கிலம், மாடர்ன் உடைகள், எதிலும் அலட்சியமான மனோபாவம் என்று எல்லாவிதத்திலும் தீபாவுக்கு எதிர்மறையானவள். ஆனாலும், அவளை தீபாவுக்கும் – தீபாவை அவளுக்கும் பிடிக்கும். கடந்த ஒரு வருடமாகவே மிக நெருங்கிய தோழிகள் இருவரும்.

தீபாவின் கல்யாணம் அவசரமாக உறுதி செய்யப்பட்டு ஏற்பாடுகள் ஆனபோது, ஷாம்பவியின் பெற்றோர் அமெரிக்காவில் இருக்கும் மகன் வீட்டுக்குப் போயிருந்தார்கள். ஷாம்பவி தன் உறவினர் வீட்டு விசேஷம் ஒன்றுக்குப் போன இடத்தில் நிகழ்ந்த சிறிய விபத்தில் காலில் எலும்பை முறித்துக் கொண்டு படுக்கையில் கிடந்தாள் மாவுக்கட்டுடன்.

'உனக்கும் கால்கட்டு; எனக்கும் கால்கட்டு" என்று குறும்பான வாழ்த்து மட்டும் அனுப்பி இருந்தாள்.

ஷாம்பவியைப் பார்த்ததும் அழுகை மடை உடைத்துக் கொண்டு பீறிட்டது சுகுணாவுக்கு.

தீபாவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. விரக்தியாகப் புன்னகைத்தாள்.

சுகுணாவைத் தேற்றிய ஷாம்பவி தீபாவிடம், "எப்போ தான் ஆஃபீஸுக்கு வருவதாக உத்தேசம்?" என்று கேட்டாள்.

"ம்ச்சு" என்று உதடு சுழித்தாள் தீபா.

"உதைபடப்போற என் கிட்ட. அங்கே தலைக்கு மேல வேலை இருக்கு. நான் ஒருத்தியாக் கிடந்து அல்லாட முடியாது. வா" என்று கைகளைப் பிடித்து இழுத்தாள்.

"மூடு இல்லை ஷாம்பவி, ப்ளீஸ். விடு எனனை."

"விடறதுக்கா வந்தேன்? அந்த சாந்தாராம் கிழம் நான் வந்த உடனே போய் தீபாவைக் கூட்டிட்டு வந்தா வா. இல்லைன்னா அந்த செண்ட்டர் மூடியே கிடக்கட்டும்னு என்னையும் துரத்திடிச்சு. கிழத்துக்கு இத்தனை நாள் உன்னைப் பார்த்து ஜொள்ளு விடாததில் ஒண்ணுமே ஓட மாட்டேங்குது போல."

"சீ" என்று கையில் இருந்த நியூஸ்பேப்பரைச் சுற்றி ஷாம்பவிவை அடித்தாள் தீபா. "ஆபாசமாப் பேசாதேடி. பாவம் அவர் என் அப்பா மாதிரி."

"அங்கே தான் நீ ஏமாந்திட்ட. ஜொள்ளு விடற எல்லாக் கிழமும் சொல்ற முதல் வாக்கியம் இது தான்."

"ஷட்டப்"

"வேணா ஒரு பந்தயம். இப்போ நீ புறப்பட்டு என் கூட ஆஃபீஸ் வர்ற. அந்தக் கிழம் உன்னை வரவேற்க வாசல்வரைக்கும் வந்து வழியலைன்னா நான் உனக்கு நூறு ரூபாய் தர்றேன். ஓகேயா?"

"போ ஷாம்பவி! நீ சுத்தி சுத்தி அங்கேயே வர்ற. என்னால ஆஃபீஸ் வந்து சகஜமா இருக்க முடியும்னு தோணலை" என்றாள் தீபா சீரியஸாக.

"என்ன தீபா! எவ்வளவு நாள் இப்படி அடைஞ்சு கிடப்ப? நீ ஜஸ்ட் என் கூட வந்து பாரு. ஆஃபீஸ்ல அன் ஈஸியா ஃபீல் பண்ணினா உடனே கிளம்பி வந்திடு. நானே கூட உன்னை வீட்டில் வந்து டிராப் பண்றேன்."

தீபா இன்னும் தயங்கினாள்.

"வேணும்னா ஒண்ணு செய்யலாம். இப்போ ஆஃபீஸ் போக வேண்டாம். என் கூட வெளியில் வா. எங்கேயாவது ரெஸ்டாரண்ட் அல்லது சினிமான்னு ஏதாவது இடத்தில் போய் உட்கார்ந்து பேசிட்டிருப்போம். நீ சகஜமா ஃபீல் பண்ணினா அப்படியே ஆஃபீஸ் போகலாம். இல்லைன்னா வீட்டுக்கே வந்திடலாம்"

இது சரி என்று பட, தீபா எழுந்து முகம் கழுவப் போனாள்.

சுகுணா ஷாம்பவிக்கு நன்றி சொன்னாள்.

தீபாவும், ஷாம்பவியும் ரெஸ்டாரண்ட் போனார்கள். ஷாம்பவி தனக்கு கால் ஒடிந்த கதையைச் சொன்னாள். அவளுடைய அம்மா அப்பா அமெரிக்காவில் என்ஜாய் பண்ணிக் கொண்டிருப்பதைச் சொன்னாள். அவளுடைய அண்ணன் அங்கேயே யாரோ ஒரு லூஸியைக் கல்யாணம் செய்து கொண்ட விஷயத்தைச் சொன்னாள். அந்த லூஸி ஈ மெயிலில்

அனுப்பி இருந்த நான் - வெஜ் ஜோக்குகளைச் சொன்னாள்.

தீபா ஆஃபீஸ் போகச் சம்மதித்தாள்.

அவர்கள் ஆபீஸ் வாசலில் போய் இறங்கும் போது ஏதோ விஷயமாக வெளியே வந்த சாந்தாராம் அங்கு தான் நின்றிருந்தார்.

"தீபா நான் சொன்னது நிஜமாயிடுச்சு பாரு. கிழத்தின் முகத்தில் வழிகிற ஜொள்ளைப் பாரு. நான் பந்தயத்தில் ஜெயிச்சிட்டேன்; மரியாதையா நூறு ரூபாய் கொடுத்திடு" என்று ஷாம்பவி சொல்ல... தீபா அடக்கிக் கொள்ள முடியாமல் சிரித்தாள்.

ஷாம்பவியின் உதவியுடன் தீபா இரண்டே நாட்களில் கிட்டத்தட்ட பழைய நிலைக்கு வர முடிந்தது.

முதல் நாள் கடமையாக ஆளாளுக்கு வந்து துக்கம் விசாரிக்க முயல, அந்த வார்த்தைகளின் அழுத்தம் தீபா மீது படர்ந்து விடாமல் தன் சாதுர்யமான பேச்சுகளால் தவிர்த்தாள் ஷாம்பவி. அப்புறம் ஒவ்வொருவரும் தாம் உண்டு தம் வேலையுண்டு என்று ஆகிவிட கிட்டத்தட்ட எல்லாவற்றையும் வெகு விரைவில் மறந்து விட முடியும் என்கிற அளவுக்கு நம்பிக்கை வந்து விட்டிருந்தது தீபாவுக்கு. மீண்டும் வேலையில் பழைய வேகமும் புத்திசாலித் தனமும் ஈடுபாடும் வந்து ஒட்டிக் கொண்டன.

அடுத்த மூன்றாம் நாள் தீபா கொஞ்சமும் எதிர்பாராத ஒரு கணத்தில் அவளுடைய கம்ப்யூட்டர் செண்ட்டருக்குள் நுழைந்து எதிரே நின்றான் சூரியா.

பளிச்சென்று நிமிர்ந்த தீபாவுக்கு ஒருகணம் அந்த அறையின் ஏஸி குளுமையையும் மீறி வியர்த்தது.

"வா.... வாங்க...." என்று நாக்குழறினாள்.

பக்கத்திலிருந்த ஷாம்பவி கேள்விக்குறியாகப் பார்த்தாள்.

தீபா தவித்த தவிப்பைப் பார்த்துப் புன்னகைத்த சூரியா, தானே ஆரம்பிப்பது போல் ஷாம்பவியிடம், "நான் சூரியா. இவங்களுடைய...." அதற்கு மேல் என்ன சொல்வதென்று தெரியாமல் வார்த்தைக்கு அவன் தடுமாற, "வுட் பீ தானே?" என்றாள் ஷாம்பவி பளிச்சென்று.

# 5

"**நா**ன் ஒன்றும் தப்பாகச் சொல்லிவிடவில்லை என்று நினைக்கிறேன்" என்றாள் ஷாம்பவி. முறைத்த தீபாவிடம், "அம்மா எல்லாம் சொல்லிட்டாங்க" என்றாள்.

"கரெக்ட்" என்றான் சூரியா.

தீபாவால்தான் விரைவில் சகஜ நிலைக்கு வர இயலவில்லை.

"என்ன சார் இந்தப் பக்கம்? ஏதாவது சொந்த வேலையா இந்த ஏரியா வந்திருப்பீங்க. திடீர்னு தீபா ஞாபகம் வந்திருக்கும். எப்படி இருக்காள்னு பார்த்திட்டுப் போகலாம்னு உள்ளே நுழைஞ்சிட்டீங்க. சரிதானே?"

"எப்படி இவ்வளவு கரெக்ட்டா சொல்றீங்க?"

"கதைன்னாலும் சினிமான்னாலும் வேறு புதுவிதமா யாருமே சொல்ல மாட்டேங்கறாங்களே!"

"புது விதமான்னா எப்படிச் சொல்லணுமாம்?"

'ரெண்டு நாளா உன் ஞாபகமாகவே இருந்தது. ராத்திரில்லாம் தூக்கம் வரலை. நாளை எப்போடா விடியும்; உடனடியாப் போய்ப் பார்த்திட்டு வரணும்னு நினைச்சிட்டிருந்தேன். விடிஞ்சதும் குளிச்சிட்டு ஓடி வந்திட்டேன்' அப்படின்னு என்னிக்கு ஒரு ஆம்பளை சொல்றானோ அன்னிக்குத்தான் நான் காதல் வயப்பட முடியும்" என்று சிரித்தாள் ஷாம்பவி.

"மை காட். எவ்ளோ போல்டு நீங்க?"

"ஷாம்பவி! ப்ளீஸ்" என்றாள் தீபா கண்டிக்கும் குரலில்.

"என்னங்க, வந்ததில் இருந்து பார்க்கறேன். நீங்க மட்டும்தான் பேசிட்டே இருக்கீங்க. உங்க ஃப்ரண்ட் ஒரு தம்ளர் தண்ணி கூட ஆஃபர் பண்ண மாட்டேங்கறாங்க"

"நீங்க வேற. இப்போ அவள் இருக்கற நிலைமைல அவளுக்குத்தான் ரெண்டு தம்ளர் தண்ணி வேணும். பேசிட்டிருங்க, நான் போய் அனுப்பறேன்" என்றவளாக அந்த அறையில் இருந்து வெளியே கிளம்பினாள்.

"எப்படி இருக்கீங்க?" என்று மெதுவாகக் கேட்டாள் தீபா.

"நான் கேட்க வேண்டிய கேள்வி" என்றான் சூரியா. "உன் முகம் ரொம்பவே டல்லா இருக்கு. இன்னும் நீ நார்மலா ஆகலைன்னு தோணுது"

"அப்படி எல்லாம் இல்லை" என்று புன்னகைக்க முயன்றாள். "வீட்டில் எல்லோரும் நல்லா இருக்காங்களா?"

"எல்லோரும் ஓ.கே. பைதபை, நான் உன் கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்"

தீபா கேள்விக்குறியாக நிமிர்ந்தாள்.

"சொல்லுங்க"

“இங்கேயே பேசலாமா அல்லது வெளியே எங்காவது போய் உட்கார்ந்து ப்ரீயா பேசலாமா?”

தீபா தயங்கினாள்.

“உனக்கு ஒரு மாதிரி இருந்ததுன்னா வேணாம். இது ஆஃபீஸாச்சே, யாராவது வந்து, போய்க்கொண்டு இருப்பாங்க. டிஸ்டர்பன்ஸ் இல்லாமல் பேச முடியாதேன்னு பார்த்தேன்....”

“சாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்” என்றபடியே கதவு திறந்து நுழைந்தாள் ஷாம்பவி.

“பார்த்தியா, இதைத்தான் சொன்னேன்” என்று சூரியா சொல்ல, தீபாவுக்குச் சிரிப்பு வந்தது.

“என்ன, என்னைப்பற்றி என்ன பேச்சு நடக்குது?” என்று கேட்டாள் ஷாம்பவி குரலில் பொய்க்கோபம் காட்டி.

சூரியா ‘ஆளை விடும்மா தாயே’ என்பது போல் கை கூப்பினான்.

“மிஸ்டர் சூரியா! இது ஆஃபீஸ். நீங்க ரெண்டு பேரும் எங்கேயாவது வெளியே போய்ப் பேசிட்டு வந்தீங்கன்னா நல்லது. என் வேலையாவது இடையூறில்லாமல் நடக்கும்” என்ற ஷாம்பவி, தீபாவிடம்,” போயிட்டு வா தீபா! மானேஜரிடம் சொல்லிட்டேன் பர்மிஷனுக்கு” என்றாள்.

“ப்ளீஸ் என்னை மன்னிச்சுக்கோங்க. வெளியே எல்லாம் போக வேண்டாம். ஷாம்பவி என்னுடைய பெஸ்ட் ப்ரண்ட். அவள் முன்னிலையில் நீங்க எது வேணுமானாலும் பேசலாம். நாம் இங்கேயே பேசலாமே” என்றாள் தீபா கெஞ்சும் குரலில்.

சூரியா முகத்தில் ஓர் ஏமாற்றப் படலம்.

“பரவாயில்லை” என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

“அப்படி ஒன்றும் முக்கிய விஷயம் இல்லை. சிந்து நாளை ஊருக்குப் போகிறாள். போகும் முன் உன்னைப் பார்த்துப் பேசிவிட்டுப் போகணும்னு ஆசைப்பட்டா. நீ எங்க வீட்டுக்கு வர முடியாது. அவளுக்கு உங்க வீட்டுக்கு வர தயக்கமா இருக்குதாம். இங்கே ஆஃபீஸ் ஓகேயா?”

தீபா மீண்டும் மென்று விழுங்கினாள்.

“டோண்ட் ஒர்ரீ. அவள் மட்டும்தான் வருவாள். நான் வரமாட்டேன்.”

“அதற்கில்லை. நாளை இங்கே ரீஜனல் மானேஜரின் இன்ஸ்பெக்ஷன் இருக்கிறது. அதான்...” என்று இழுத்தாள் தீபா.

"ஒண்ணு செய்யலாமே தீபா. எங்க வீட்டில் இப்போ யாரும் இல்லை. இன்னிக்கு ஈவ்னிங் நாங்க பர்மிஷன் போட்டுட்டு நாலு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்திடறோம். நீங்க உங்க தங்கையை அங்கே வரச் சொல்லிடுங்க. எனக்கும் ஒரு புது ஃப்ரண்ட் கிடைத்த மாதிரி இருக்கும்" என்றபடி தன் முகவரியைக் கொடுத்தாள் ஷாம்பவி.

சூரியா விடைபெற்றுச் சென்றான்.

"ஏன் தீபா இவ்வளவு ரிஸர்வ்டா இருக்கற?" எவ்வளவு ஆசையா கூப்பிட்டார்? கூடப் போய் காஃபி சாப்பிட்டு வந்தால் என்னவாம்? போயிருக்கலாமே! பிடிக்கலையா?" என்று கேட்டாள் ஷாம்பவி.

'பிடிச்சிருந்தது. அதனால்தான் போகலை' என்று சொல்ல நினைத்துச் சொல்லாமல் விழுங்கினாள் தீபா.

"சரியான ஊமைக்கோட்டான்'டி நீ"

சிந்து மாலை நாலரை மணிக்கு வந்தாள்.

"அன்னிக்கு மேக்-அப்பில் பொண்ணு அலங்காரத்தோடு பார்த்ததை விடவும் இன்னிக்கு சிம்பிளாக இருக்கும்போது ரொம்பவே அழகா இருக்கீங்க அண்ணி!" என்றாள். கூடவே, "உங்களை நான் அண்ணின்னே கூப்பிடலாம் இல்லையா?" என்றும் கேட்டுக் கொண்டாள்.

தீபாவுக்குப் பெருமையாக இருந்தது.

சிந்து மூச்சு விடாமல் பேசினாள். தனக்குப் படிப்பு அவ்வளவாக வராத கதை. அவளுக்குக் கல்யாணம் ஆன கதை. இன்னும் குழந்தை ஏதும் இல்லாத கதை. கணவனின் பிரைவேட் கம்பெனி இன்ஜினியரிங் உத்தியோகம், அவருக்கு இருக்கும் வேறு கனவுகள் என்று ஏகப்பட்ட விஷயங்கள் பேசினாள். தவறியும் கூட பேச்சில் அருண் பற்றிய வார்த்தைகளே வராமல் பார்த்துக் கொண்டாள்.

"சூரியாவுக்கு அவங்க காலேஜில் நல்ல பேரு அண்ணி. அவனுக்கு எவ்ளோ ஃபேன்ஸ் தெரியுமா? சூரியா காலேஜ் லெக்சரர்னு உங்களுக்குத் தெரியுமில்லையா?"

தெரியும் என்பது போல் தலை அசைத்தாள் தீபா.

"நல்லா பேசுவான். பயங்கரமான ஆளு. பேச்சுலயே ஆளைக் கவுத்திருவான். அப்பாவுக்கு அவனைத்தான் ரொம்பப் பிடிக்கும். ஏன் அண்ணி, உங்களை வந்து பார்த்தானா?"

தீபா தர்மசங்கடமாக ஷாம்பவியைப் பார்த்துச் சிரித்தாள்.

"ஓ சாரி. நான் ஒரு முட்டாள். உங்க கிட்டப் பேசித்தானே இந்த அட்ரஸே வாங்கி வந்தான்?" என்றபடி தன் தலையைத் தட்டிக் கொண்டாள்.

ஷாம்பவியின் வீட்டைச் சுற்றிப் பார்த்து ஆஹா என்று பெருமூச்சு விட்டாள். ஷாம்பவி தந்த காபியையும் டிஃபனையும் ஒரு பிடி பிடித்தாள்.

"உங்க கூடப் பேசிட்டிருந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கு அண்ணி. எனக்குத் தெரிஞ்சு அப்பா தன் வாழ்க்கைல தைரியமா சுயம்மா செஞ்ச ஒரே நல்ல காரியம் அன்னிக்கு 'நீங்க தான் எங்க வீட்டு மருமகள்'னு சொன்னதுதான். சீக்கிரம் வாங்க அண்ணி' என்று எழுந்தாள். போன் நம்பர், முகவரி கொடுத்தாள். தீபாவிடமும் ஆஃபீஸ் நம்பர் வாங்கிக் கொண்டாள். "நான் நாளைக்குக் கிளம்பறேன். அடிக்கடி போன் பண்ணுங்க அண்ணி" என்றாள் உரிமையுடனும் பாசத்துடனும்.

கிளம்பிப் போனாள்.

புயலடித்து ஓய்ந்தது போல் இருந்தது.

"அப்புறம் என்ன தீபா! உனக்கு நாத்தனார் ரொம்பவே நல்லவளாத் தெரியறா. கொஞ்சம் வெகுளியாவும் இருக்கா. சூரியாவும் ஸ்மார்ட்டா இருக்கார். எப்போ கல்யாணச் சாப்பாடு போடப்போற?" என்று சீண்டினாள் ஷாம்பவி.

ஒருவாரம் ஓடியது.

தீபாவின் கண்களிலும் கலக்கம் கலைந்து கொஞ்சம் கனவு வர ஆரம்பித்திருந்தது.

திடீரென்று ஒருநாள் காலையில் ஆஃபீஸில் வந்து நின்றான் சூரியா.

"ரெண்டு நாளா உன் ஞாபகமாகவே இருந்தது. ராத்திரில்லாம் தூக்கம் வரலை. நாளை எப்போடா விடியும்; உடனடியாப் போய்ப் பார்த்திட்டு வரணும்னு நினைச்சிட்டிருந்தேன். விடிஞ்சதும் குளிச்சிட்டு ஓடி வந்திட்டேன்" என்றான்.

தீபாவுக்குச் சிரிப்பு வந்தது.

"இந்த மாதிரி வார்த்தைகள் சொன்னா விழுந்திடுவேன்னு சொன்னது நானில்லை" என்றாள்.

ஆனால், மனத்தளவில் விழவே செய்தாள். அன்று பர்மிஷன் போட்டுவிட்டு அவனுடன் முதன் முறையாக பக்கத்து ரெஸ்டாரண்ட் வரை காபி குடிக்கப் போனபோது சங்கோஜம் வெகுவாகக் குறைந்திருந்தது.

# 6

வேலாயுதத்தின் உறவினர்களின் வரவு மெல்ல மெல்லத் தேய்ந்து வந்தது. தீபாவுக்கு ஏற்பட்ட கதி அவர்களை வெகுவாகப் பாதித்திருந்தது. அவளைப் பிடிக்காதவர்கள் அவளுடைய உறவு வட்டாரத்தில் யாருமே கிடையாது. அவளுடைய அமைதியும், யாரையும் எக்காலமும் குறை சொல்லாத பணிவும், அன்பும் எல்லோரையும் கவர்ந்த விஷயம் என்பதால் இத்தனை நாட்களும் மாற்றி மாற்றி யாராவது வந்து அவளுக்கு தைரியமும் ஆறுதலும் சொல்லிய வண்ணம் இருந்தனர். ஆனால், அவர்களில் பலருக்குள்ளும் பொதுவாக இருந்த ஒரு விஷயம் ஈஸ்வரமூர்த்தி எந்த அளவுக்கு தன் வாக்கினைக் காப்பாற்றுவார் என்பது குறித்த சந்தேகம். எதற்கும் ஒருமுறை அவர் வீட்டுக்குப் போய் இது குறித்து உறுதி செய்து கொண்டு விடலாமா என்று தீபாவின் தாய்மாமனும், அத்தையும் சொன்னபோது வேலாயுதம் சங்கோஜம் காரணமாகத் தடுத்து விட்டார். அவர்கள் துக்கத்தில் இருப்பார்கள்; இப்போது வேண்டாம். பக்குவமாக நானே சமயம் பார்த்து அதனை உறுதி செய்து கொண்டு உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்' என்று சொல்லி விட்டிருந்தார்.

"எதற்குச் சொல்கிறோம் என்றால் அவர் சொன்னாலும் சொல்லா விட்டாலும் தீபா அவங்க வீட்டு மருமகள் தான்ங்கறதை நம்மால் லீகலா ப்ரொசீட் பண்ணி நிரூபித்திட முடியும். ஆனா, அப்புறம் அவள் விதவைங்கற மாதிரி ஆகி விடுமே என்றுதான் பார்க்க வேண்டி உள்ளது. அதோடு நாம் அந்த மாதிரி அடாவடியா இறங்கறது அவங்களுக்கு நம்மைப் பற்றிய தவறான எண்ணத்தை உண்டாக்கி விடக் கூடாது பாருங்க" என்பது தான் அவ்வப்போது கூடுகின்ற போதெல்லாம் எல்லோருடைய அபிப்ராயமாக இருந்தது.

"அந்த ஆள் சரியாத்தான் தெரியறார். அவர் சம்சாரம் தான் அவ்வளவு பாந்தமாத் தெரியலை" என்று இழுத்த உறவினர்களுக்கு, சரோஜா குறித்து ஏற்கெனவே ஒரு முடிவு ஏற்பட்டிருந்தது. நாள்பட நாள்பட வேலாயுதத்தின் பொறுமை அவர்களையும் தத்தமது காரியங்களின் மீது கவனம் செலுத்த வைத்து விட்டது.

"வாங்க வாங்க" என்று வாய் நிறையப் பல்லாக வரவேற்றார் வேலாயுதம்.

உள்ளே நுழைந்த ஈஸ்வரமூர்த்தி பழங்கள் வாங்கி வந்திருந்த பையினை நீட்டினார்.

"என்னடா - அன்னிக்கு சபைல வச்சு பெரிசா, தீபாதான் எங்க வீட்டு மருமகள்னு சொல்லிட்டு அதோட காணாமல் போயிட்டானேன்னு நினைச்

சிருப்பீங்க" என்றார் சிரித்தபடி.

"வாங்க" என்று இழுத்துப் போர்த்தியபடி வரவேற்றாள் சுகுணா.

"என் மருமகளை எங்கே? லீவு நாள் தானே; வீட்டில் இருப்பாளேன்னு நினைச்சேன்"

"அவளுடைய ஃப்ரண்ட் ஷாம்பவி வந்து கூட்டிட்டுப் போயிருக்கிறா. நீங்க வர்றீங்கன்னு தெரிஞ்சிருந்தா வீட்டில் இருந்திருப்பா. சாயங்காலம்தான் வருவா."

"அதனாலென்ன பரவாயில்லை."

"அவளுக்கும் வீட்டிலேயே அடைந்து கிடந்தால் அந்த ஞாபகம் வந்திட்டே இருக்குமேன்னு தான் நானும் விட்டிர்றது. ஷாம்பவியும் இவளும் ரொம்பகாலமா தோழிகள். ஒருத்தருக்கொருத்தர் நல்ல துணை" என்று சப்பைக்கட்டினார் வேலாயுதம். உள்ளூர, தீபா வீட்டில் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்கிற தவிப்பு இல்லாமல் இல்லை.

"வீட்டில் அவங்களையும் கூட்டிட்டு வந்திருக்கலாமே" என்றாள் சுகுணா, பலகாரத் தட்டினை முன்னால் வைத்தபடியே.

ஈஸ்வரமூர்த்தி கூட்டி விழுங்கினார்.

"வந்திருப்பா. ஆனா அவளுக்கு இன்னும் மகன் போன துக்கம் விடலை."

"இருக்காதா பின்னே, அதுவும் அவர் அவங்கம்மாவுக்கு ரொம்பச் செல்லம்னு சொல்லி இருக்காங்க."

"ஆமாம். அவளுக்கு அருண்தான் உலகமே. நானும் சரி, சூரியாவும் சரி, சிந்துவும் சரி எல்லோருமே ரெண்டாம் பட்சம்தான். என்ன செய்யறது? யாரும் கற்பனையா செஞ்சோம் இப்படி ஆகும்னு?"

கொஞ்ச நேரம் எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

"சும்மா ரொம்ப நாளாச்சே பார்த்திட்டுப் போகலாமேன்னு வந்தேன். தைரியமா இருங்க. இந்தத் துக்கம் எல்லாம் கொஞ்சம் தெளியட்டும். பார்க்கலாம்" என்று எழுந்தார் ஈஸ்வரமூர்த்தி.

"அது சரி பரவாயில்லை. மெதுவா ஆகட்டும். நானே உங்க வீட்டுக்கு வரலாம்னுதான் இருந்தேன்..." என்றார் வேலாயுதம்.

ஈஸ்வரமூர்த்திக்கு பகீரென்றது.

"அதாவது சம்பந்தி! ஒண்ணு சொன்னா வித்தியாசமா எடுத்துக்க

மாட்டீங்கன்னு நினைக்கிறேன்."

"சொல்லுங்க"

"அருண், அம்மா கொஞ்சம் நல்லா ஆகிறவரைக்கும் நீங்க இங்கே வர்றதைத் தவிர்த்தால் நல்லது. வரவேண்டாம்னு சொல்றதா நினைச்சுக்காதீங்க. உங்களைப் பார்த்ததும் அவளுக்கு ரிஸப்ஷன் சம்பவங்கள் எல்லாம் ஞாபகம் வந்து அழுது ஆர்ப்பாட்டம் செய்து அப்ஸெட் ஆயிடுவா. இப்பதான் கொஞ்சம் கொஞ்சமா தெளிஞ்சிட்டு வர்றா. கம்ப்ளீட்டா சரியானப்புறம் நானே வந்து சொல்றேனே" என்று இழுத்தார் கெஞ்சும் தோரணையில்.

"அடடா! அதுக்கு ஏன் இவ்வளவு பீடிகை. நீங்க சொல்றது ரொம்ப சரி."

"அப்போ நான் உத்தரவு வாங்கிக்கறேன்."

ஈஸ்வரமூர்த்தி படியிறங்கி நடந்தார்.

நேற்று இருந்தாற்போல் திடீரென்று அவருக்கு வேலாயுதத்தின் நினைவு வந்தது. கருமாதி அன்று பார்த்தற்குப் பிறகு மாதங்கள் கடந்து விட்டன. அதன்பிறகு எந்தத் தொடர்பும் இல்லை. நானும் சும்மா கிடக்காமல் சூரியாவுக்கும் தீபாவுக்கும் கல்யாணம் நடக்கும் என்று வேறு சொல்லித் தொலைத்திருக்கிறேன். நாளாகி விட்டதே என்று அவர் இங்கே வந்து நின்றால் என்ன ஆகும் என்று யோசித்துப் பார்த்தார். அப்படி ஏதாவது ரசாபாசமாக நடந்து விடும்முன் தானே போய் அவரிடம் பக்குவமாகச் சொல்லி விடுவது நல்லது என்று முடிவெடுத்து மறுநாளே கிளம்பி விட்டார். இப்போது வேலாயுதத்துக்கு நிலைமையைப் புரிய வைத்து விட்டதில் ஒரு தற்காலிக நிம்மதி.

"லீவு நாளும் அதுவுமா எங்கே போயிட்டு வர்றீங்க?" என்று கேட்டாள் சரோஜா உடைமாற்றிக் கொண்டிருந்த ஈஸ்வரமூர்த்தியிடம்.

"சும்மா வாக் மாதிரி ஊருக்குள்ள ஒரு ரவுண்ட் போயிட்டு வர்றேன்."

"அதான் எங்கே போயிருந்தீங்கன்னு கேட்கறேன்."

சரோஜாவின் குரலில் லேசாக உஷ்ணம். ஈஸ்வரமூர்த்திக்கு வியர்க்கத் தொடங்கியது.

"லைப்ரரிக்குப் போயிருந்தேன்."

"ஓஹோ! என் கிட்ட பொய் சொல்ற அளவுக்கு நிலைமை ஆயிருச்சா? அந்த விளங்கா மூஞ்சி வீட்டுக்குத்தானே போயிருந்தீங்க?"

ஈஸ்வரமூர்த்திக்கு பகீரென்றது. இது இவளுக்கு எப்படித் தெரியவந்தது?

யார் போட்டுக் கொடுத்தது?

"முழிக்கறதைப் பாருங்க, ரெண்டாட்டுல ஓராடு முழிச்ச கதையா. என்ன விஷயமா போயிருந்தீங்க?"

"வந்து...." என்று இழுத்தார்.

"நாம எதுவும் அவங்களுக்குக் கொடுத்திருக்கலையே... திருப்பி வாங்கப் போனேன்னு சொல்றதுக்கு?"

"வாக்குக் கொடுத்திருக்கோமே சரோஜா" என்றார் முணுமுணுப்பாக.

"என்னது?" என்று சப்தமாய்க் கேட்டாள் சரோஜா.

ஈஸ்வரமூர்த்தி அமைதியானார்.

"இதோ பாருங்க. நான் திரும்பத் திரும்பச் சொல்லிட்டேன். அவங்க வீட்டோட நமக்கு எந்தத் தொடர்பும் இருக்கக் கூடாது; அந்த விடியாமூஞ்சியோட சம்பந்தம் பேசப்போய் ஒரு பையனைப் பறி கொடுத்திட்டு நான் தவிக்கறது போதாதா?" என்று அழ ஆரம்பித்தாள்.

"அப்படியில்லை சரோஜா. அந்தப் பொண்ணோட நிலைமையை நினைச்சுப் பாரு. பாவம்" என்று பேசப் போனவர், அளுடைய சிவந்த கண்களில் தெரிந்த ஆவேசத்தையும் ஆக்ரோஷத்தையும் கண்டு வெலவெலத்துப் போனார்.

"உங்களுக்கு அந்த மாதிரி ஒரு நினைப்பு இருந்தா உறுதியா நான் சொல்றதைக் கேட்டுக்கோங்க. நானும் செத்து என் மகன் கூடவே போயிடறேன். அப்புறம் நீங்களும் உங்க சின்ன மகனும் அந்தத் தரித்திரத்தை இந்த வீட்டுக்குள்ள கூட்டிட்டு வந்து நாசமாப் போங்க."

ஆவேசமாகச் சொன்ன வேகத்தில் உள் அறைக்குள் போய் கதவை ஓங்கிச் சார்த்தினாள் சரோஜா.

அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த சூரியாவுக்கு அடி வயிறு கலங்கியது.

# 7

"எங்கேப்பா, நேத்திக்கு திடீர்னு ஆளைக் காணோம்?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள் தீபா - ஷாம்பவியிடம். "மானேஜர்கிட்ட கேட்டால் ஏதோ அவசர வேலைன்னு லீவு சொன்னதா மட்டும் சொன்னார். என்ன விஷயம்?"

ஷாம்பவி குறும்பாகச் சிரித்தாள். "என்னவாக இருக்கும் சொல்லு!"

தீபா கண்களைச் சுருக்கி யோசித்தாள். "தெரி"யலைப்பா."

"மண்டு ஏதாவது ஊகிக்க வைக்க வேண்டியதுதானே. பாய் ஃப்ரண்டு கூட மகாபலிபுரம் போயிட்டேன்; அல்லது, முன்பு எப்போதோ போனதற்கு இப்போ அபர்ஷன் பண்ண வேண்டி ஆஸ்பத்திரில அட்மிட் ஆகி இருந்தேன். இந்த மாதிரி ஏதாவது..."

"சீ" என்று அவளைத் தன் கையில் இருந்த ஸ்கேலால் அடித்தாள் தீபா. தொலைபேசி ஒலிக்க... எடுத்து காதுக்குக் கொடுத்தவள், "ஷாம்பவி! உனக்கு ஐ.எஸ்.டி கால்" என்று நீட்டினாள். ரிஸீவரை அவசரமாக வாங்கினாள் ஷாம்பவி. அவளுடைய பேச்சுக்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்பது போல் மெல்ல அந்த அறையை விட்டு வெளியேறினாள் தீபா.

"ஆமாண்ணா! பார்த்தேன் உனக்கு லெட்டர் போட்டாராம். உன் நம்பர் காண்டாக்ட் பண்ண முடியலையாம். சாரின்னு சொல்லச் சொன்னார். வேற ஒரு நல்ல ஆஃப்பர் இங்கேயே கிடைச்சுட்டதாம்..." என்பது வரை காதுகளில் விழுந்தது.

அடுத்த சில நிமிடங்களில் ஷாம்பவி வெளியே வந்து தீபாவை அழைத்தாள்.

"நான் என்ன பாய் ஃப்ரண்ட் கூடவா போன்ல பேசினேன். என் அண்ணன் கூடத் தானே? நீ ஏன் வெளியே போன?"

"ஏதாவது பர்ஸனலா பேச வேண்டி இருந்தா...?"

"ஏண்டி, நமக்குள்ள தனிப்பட்ட மேட்டர்னு இது வரைக்கும் ஏதாவது இருக்கா என்ன?"

"சரி தாயே விடு. விஷயத்தைச் சொல்லு. அப்பா அம்மா எல்லாரும் அங்கே நல்லா இருக்காங்களா? ஏன் சீரியஸா பேசிட்டிருந்த?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

"அப்பா, அம்மா இப்போதைக்கு வர்றதாத் தெரியலை. ஆக்சுவலா அண்ணனுக்குத் தெரிஞ்ச ஒருத்தர் அங்கே ஒரு ப்ராஜக்ட்டுக்காக கம்ப்யூட்டர் ஆபரேஷன்ஸ் தெரிஞ்ச மெக்கானிகல் இன்ஜினியர் வேணும்னு சொல்லி இருந்தாராம். அண்ணனோட ஃப்ரண்ட் ஒருத்தர் திருச்சியில இருக்கார். அவர்தான் போகிறதா இருந்தது. அவருடைய பயோடேட்டா ரெஸ்யூம் எல்லாம் அனுப்பச் சொல்லி அண்ணன் தான் எல்லா சிபாரிசும் பண்ணி அந்த ஆஃபரை அவருக்கு வாங்கிக் கொடுத்தான்.

விசாவுக்கெல்லாம் கூட அரேன்ஜ் பண்ணிட்டான். இப்போ கடைசி

நிமிஷத்தில் அவர் போகலையாம். அட்லீஸ்ட் சமயத்தில் இன்ஃபார்மாவது பண்ண வேண்டாம்? அதையும் செய்யலையாம். காண்டாக்ட் பண்ண முயற்சி பண்ணி இருக்கான். எந்த ஈ மெயிலுக்கும் பதில் கிடையாதாம். அதான் என்னை திருச்சிக்குப் போய் நேரில் விசாரித்து வரச் சொல்லி இருந்தான். நேத்திக்கு அதற்காகத் தான் போயிருந்தேன். அவர் சாரின்னு சொல்லிட்டார். அதைத்தான் அண்ணன் கிட்ட சொல்லிட்டிருந்தேன்..."

"அவ்வளவு பெரிய அமெரிக்காவில் ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியர் கிடைக்கலியா?"

"அந்த ப்ராஜக்ட் ஹெட் ஒரு தமிழ்க்காரராம். அதனால் ஒரு தமிழனுக்குத் தான் அந்த இடத்தைத் தருவேன்னு பிடிவாதமா இருக்காராம். அதுவும் அண்ணன் பார்த்துக் கைகாட்டற ஆளுக்குத்தான் அந்த போஸ்ட்டுன்னு ஸ்ட்ரிக்டா சொல்லிட்டாராம். அதான் அண்ணனுக்கு டென்ஷன்..."

தீபாவுக்குள் திடீரென்று ஃப்ளாஷ் அடித்தது.

"அந்த போஸ்ட் இன்னும் வேகண்ட்டாத் தான் இருக்கா?"

"ம்..."

"உன் பேச்சு உன் அண்ணனிடம் எவ்வளவு தூரம் எடுபடும்?"

"எதுக்குடி?"

"உன்னால சிந்துவோட வீட்டுக்காரருக்கு அந்த வேலையை வாங்கித் தர முடியுமா?"

ஷாம்பவியின் கண்கள் விரிந்தன.

"ஏய்! நாத்தனாருக்கு இப்ப இருந்தே ஐஸா?"

தீபா சிரித்தாள்.

"முதலில் கன்ஃபர்ம் பண்ணு அவர் மெக்கானிகல் இன்ஜினியர் தானான்னு."

அன்றே சிந்துவுக்கு போன் செய்தார்கள்.

நீலகண்டன் மெக்கானிகல் இன்ஜினியர், யுனிவர்ஸிட்டி ராங்க் ஹோல்டர், பாஸ்போர்ட் இருக்கிறது, உயர் கல்விக்காக அமெரிக்கா போகும் ஆசையில் முன்பு டோஃபல், ஜிஆர்இ எல்லாம் எழுதி நல்ல ஸ்கோர் இருந்தும் விசா கிடைக்காத காரணத்தால் போக முடியாமல் போனவன், கம்ப்யூட்டரில் மிகச் சமீபத்திய கோர்ஸ்கள் வரை எல்லாம் அத்துபடி... என்றெல்லாம் அறிய முடிந்தது.

"சிந்து உன் வீட்டுக்காரருக்கு அமெரிக்கா போக ஓர் ஆஃபர் கிடைத்தால் போவதற்குத் தயாரா?"

சிந்து ஆகாயத்துக்கும் பூமிக்குமாகக் குதிப்பது போனிலேயே தெரிந்தது.

"அண்ணி! அண்ணி! யூ ஆர் சிம்ப்ளி கிரேட்...." என்று அழவே ஆரம்பித்து விட்டாள்.

உடனடியாக நீலகண்டனிடம் அவனுடைய சிவி விவரங்களை ஷாம்பவியின் அண்ணனுக்கு அனுப்பச் சொல்லிவிட்டு மேற்கொண்டான தொடர்புகளுக்கு ஈ-மெயில் முகவரி விவரங்களையும் சொன்னார்கள்.

# 8

ஏ.ஆர். ரஹ்மானின் இசையில் ஹரிஹரன் உருகிக் கொண்டிருந்த பாடலில் மெய்மறந்திருந்தாள் தீபா.

எனக்கு ஏ.ஆர். ரஹ்மான் பாட்டுன்னா ரொம்பப் பிடிக்கும் என்று அருண் சொன்னது ஞாபகம் வந்தது.

யோசித்துப் பார்த்தால் அருண் அவளிடம் பேசிய ஒரே வாசகம்.

அவனுக்கு - அவனுக்கு என்று நினைப்பது சரிதானா - அவருக்குப் பிடித்த இந்த இசையைக் கேட்கும் போதெல்லாம் அவருடைய ஞாபகம் வந்து என்னைக் கொல்லாதா?

நடந்து முடிந்த விஷயம் கொஞ்சம் கூட நீ சம்பந்தப்படாதது தீபா. நீ எந்தத் தவறும் செய்யவில்லை. இயற்கை சில சமயங்களில் தவறாக வரைந்து விடும் கிறுக்கல் மாதிரிதான் அந்தச் சம்பவம். நீ உனக்குள்ளே இருக்கும் அர்த்தமில்லாத குற்ற உணர்வை அழிச்சிட்டு வெளியே வா என்று ஷாம்பவி அடிக்கடி சொல்வது ஞாபகம் வந்தது.

"ஹலோ! எங்கே அப்பப்போ காணாமல் போயிடறே?" என்று அவள் முகத்தின் முன்பாக விரல் சொடுக்கினான் சூரியா.

அவர்கள் இருந்த இடம் ஒரு ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரண்ட். சூரியாவும் ஷாம்பவியும் தேற்றித் தேற்றி இப்போது தீபா அவனுடன் சகஜமாகப் பழக ஆரம்பித்திருந்தாள்.

அவனிடம் அருணைப் பற்றிக் கேட்கலாமா என்று எழுந்த எண்ணத்தை

விலக்கினாள். "ஒன்றுமில்லை" என்றாள்.

சூரியா கைகளில் வாங்கி வந்திருந்த ஐட்டங்களை மேசை மீது பரப்பினான்.

"நாலஞ்சு நாள் முன்னால் அப்பா உங்க வீட்டுக்கு வந்திருந்தாங்களோ?" என்று கேட்டான்.

"ஆமாம். ஆக்சுவலா அப்போ நான் வீட்டில் இல்லை. ஷாம்பவி வீட்டுக்குப் போயிருந்தேன். ஏன் என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லை. அங்கே அப்பா என்ன பேசினார்னு தெரிஞ்சுக்கலாம்னு தான்."

"புரியலை..."

"நீ சரியான மாங்காய் தீபா. நம்ம கல்யாணத்தைப் பற்றி நான் எங்கப்பா கிட்ட கேட்க முடியுமா? உங்க வீட்டில் ஏதாவது சொன்னாரான்னு தெரிஞ்சுக்கலாம்னு பார்த்தா.... உனக்கு இண்ட்ரஸ்ட் இருக்கற மாதிரியே தெரியலையே."

"சூரியா..." என்று குரல் தழுதழுத்தாள். "நான் எப்படி....." என்று சொல்ல ஆரம்பிக்கும் போதே அவளுடைய கண்களில் நீர் பெருகியது. "என் சூழ்நிலையைப் புரிஞ்சுக்கோங்க. நான் இது பற்றி யோசிக்கறதே தப்போன்னு தவிச்சிட்டிருக்கேன். என்னைப் போய்..."

"ஹே!" என்று அவள் கையை அழுத்திப் பிடித்தான் சூரியா.

"உன் உணர்வுகளைப் புண்படுத்தி இருந்தால் ஐ'ம் சாரி. ஆனால், நீ இவ்வளவு டெண்டரா இருக்கறது சரியில்லை தீபா. பீ போல்டு அண்ட் ஸ்ட்ராங்"

தீபா கொஞ்சம் தண்ணீர் குடித்து - தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"சரி, அந்த மேட்டரை விடு. மாப்பிள்ளை நீலகண்டன் மேட்டர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?"

"அந்தக் கவலையே வேணாம் உங்களுக்கு. ஷாம்பவி எனக்காகவாவது அந்தச் சான்ஸை நிச்சயம் அவருக்கு வாங்கிக் கொடுத்திடுவா. உங்க தங்கை அது குறித்து ஏதாவது சொன்னாளா?"

"மூச்சு விடமாட்டேங்கறா. நேத்து கூட போனில் பேசினேன். ஒரு கோடி கூடக் காட்டமாட்டேங்கறா. 'என்ன உன் குரல் ரொம்ப உற்சாகத்துல துள்ளற மாதிரி தெரியுது, ஏதாவது விசேஷமா'ன்னு கூடக் கேட்டுப் பார்த்திட்டேன்.

திருஷ்டி விழுந்திடும்னு நினைக்கிறாளோ என்னவோ. எப்படியும் ஒரு நாள் சொல்லித்தானே தீரணும். அன்னிக்கு வச்சுக்கறேன் கச்சேரியை."

தீபா சிரித்துக் கொண்டாள். "குடும்பம் என்று இருந்தால் இந்த மாதிரி சகோதரி-சகோதரன், இவர்களுக்குள்ளான ரகசியங்கள் அது, குறித்த சீண்டல்கள் எல்லாவும் இருந்தால்தான் நிஜமான சந்தோஷம். பாவம் செய்தவர்கள் தான் என்னை மாதிரி ஒற்றைப் பிள்ளையாகப் பிறப்பெடுப்பார்கள் என்று நினைக்கிறேன்" என்றாள்.

"டோண்ட் ஒர்றீ. நம் வீட்டில் நிறையக் குழந்தைகளை நடமாட விட்டு விடலாம்" என்றான் சூரியா.

"சீ" என்று சிணுங்கக் கூடக் கூச்சப்பட்டாள்.

"ரொம்ப தாங்க்ஸ் தீபா. எங்க குடும்பத்து உறுப்பினர்கள் மீதுதான் உனக்கு எவ்வளவு அக்கறை!"

'தாங்க்ஸ் எல்லாம் எதுக்கு சூரியா? ஏன் உங்க குடும்பம்னு பிரிச்சுப் பேசறீங்க?' என்றெல்லாம் கேட்கத் தோன்றினாலும் கூட, நாடகத்தனமாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு உள்ளேயே புதைத்துக் கொண்டாள்.

அலுவலகம் தேடித் தன்னைப் பார்க்க வந்த அந்த நபரை யாரென்றே தெரியவில்லை வேலாயுதத்துக்கு.

"என் பெயர் ராமநாதன்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டு எதிரே உட்கார்ந்தவருக்கு - கிட்டத்தட்ட வேலாயுதத்தின் வயதுதான் இருக்கும்.

"என்னை உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நானும் இதே ஊரில் தான் குடி இருக்கிறேன். மாரியம்மன் கோயில் தெருவில்தான் வீடு."

"நல்லது. என்ன விஷயம்? சொல்லுங்க."

"நான் போனவாரம் சொந்த வேலையாக சென்னைக்குப் போயிருந்த இடத்தில் உங்க ஃப்ரண்ட் சண்முகநாதனைப் பார்த்தேன். அவர்தான் உங்களைப் பற்றிச் சொல்லி சந்திக்கச் சொன்னார்."

சண்முகநாதன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் வேலாயுதத்தின் முகம் மலர்ந்தது.

"ரொம்ப சந்தோஷம். சொல்லுங்க. நான் உங்களுக்கு என்ன செய்யணும்?" என்று கேட்டார் குரலில் அன்பொழுக.

"வந்து- ஆஃபீஸ்ல வச்சு இந்த பேச்சுப் பேசறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. முறைப்படி இந்த விஷயத்தை நான் உங்க வீட்டுல வந்துதான் பேசணும். உங்க அபிப்ராயத்தைத் தெரிஞ்சுக்கிட்டு நானும் என் மனைவியும் உங்க வ்ட்டுக்கு வரலாம்னு இருக்கோம்."

வேலாயுதம் மௌனம் சாதித்தார்.

"எனக்கு ஒரே பையன். பெயர் சந்திரன். டெலிபோன் ஆபரேட்டரா மதுரைல இருக்கான். அவனுக்கு உங்க பொண்ணைப் பார்க்கலாமான்னு..."

வேலாயுதம் தர்மசங்கடமாக நெளிந்தார்.

"உங்க பொண்ணுக்கு நடந்த எல்லாவற்றையும் சண்முகநாதன் சொன்னார். நானோ என் மனைவியோ அதைப் பெரிசா நினைக்கலை. பாவம், நடந்த அசம்பாவிதத்துக்கு அது என்ன பண்ணும்? எது எப்படின்னாலும் ஜாதகம் பார்த்துத் தானே முடிவு செய்யப்போகிறோம்? உங்க பொண்ணோட ஜாதகம் தந்தீங்கன்னா அடுத்தபடியா ஏதும் செய்ய ஏதுவா இருக்கும்."

வேலாயுதத்தின் கண்கள் கலங்கின.

"சார்! உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனா உங்க கிட்ட மறுப்பு மாதிரி சொல்ல வேண்டி இருக்கேன்னு நினைச்சா வருத்தமாகவும் இருக்கு. தீபாவுக்கு அவங்க வீட்டிலேயே சம்பந்தம் முடிஞ்ச மாதிரிதான் சார். சம்பந்தி அன்னிக்கே அவளை அவங்க ரெண்டாவது பையனுக்கு எடுத்துக்கறதா சொல்லிட்டார்."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். பரவாயில்லை சார்."

"நம்ம ஆளுகளா இருக்கீங்க. இதே ஊரிலயும் இருக்கீங்க. தெரியாமல் பழகாமல் இருந்திருக்கோமேன்னு நினைச்சா ஆச்சரியமா இருக்கு. நாம் சம்பந்தியாக முடியாவிட்டாலும் குடும்ப நண்பர்களா இருக்கலாமே. கட்டாயம் உங்க வீட்டுல அவங்களைக் கூட்டி வாங்க" என்று நெகிழ்ந்தார் வேலா"யுதம்.

தீபாவின் அனர்த்தலுக்காக ஷாம்பவி தன் அண்ணனிடம் பலமாக சிபாரிசு செய்ததன் விளைவாக அடுத்த ஒரே மாதத்தில் நீலகண்டனுக்கு அந்த அமெரிக்க வேலை கிடைத்து அவன் மனைவியுடன் கிளம்பிப் போக வேண்டிய தேதியும் உறுதியானது.

சரோஜாவுக்கு தன் மகள் சிந்து மீது அருணுக்கு அடுத்தபடியான பிரியம் என்பதால் இந்த விஷயம் அவளை அதிக அளவில் சந்தோஷப்படுத்தும். அந்த நேரத்தில் இதற்குக் காரண கர்த்தாவே தீபாதான் என்று சொல்லித்தான் அவள் மீது முதன் முறைய ாக ஒரு நல்லபிப்ராயத்தை உருவாக்க வேண்டும்

என்று திட்டமிட்டிருந்தார்கள் ஈஸ்வரமூர்த்தியும் சூரியாவும். அதனாலேயே சிந்துவுக்கு போன் செய்து அவசரப்பட்டு அவள் தீபாவைப் பற்றி அம்மாவிடம் சொல்லிவிட வேண்டாம் என்றும் பக்குவமான சமயம் பார்த்து தானே சொல்லிக் கொள்வதாகவும் ஈஸ்வரமூர்த்தி சொல்லி இருந்தார்.

எதிர்பார்த்தபடியே சரோஜா நீண்ட மாதங்களுக்குப் பிறகு வாயெல்லாம் பல்லாகச் சிரித்தாள்.

"என் மகள் அமெரிக்கா போகப் போகிறாளா? மாப்பிள்ளை கெட்டிக்காரர்தான்" என்று வாயாற புலம்பித் தீர்த்தாள்.

"இவ்வளவு சந்தோஷப்படறியே. இதுக்கு முக்கிய காரணம் யார்னு தெரியுமா?" என்று ஒரு சமயத்தில் ஆரம்பித்தார் ஈஸ்வரமூர்த்தி.

# 9

சரோஜாவின் முகம் சட்டென்று கூம்பியது.

"யார்?" என்றாள் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டபடி.

ஈஸ்வரமூர்த்தி தீபாவைப் பற்றிச் சொல்வதற்கு இது ஏற்ற தருணமல்ல என்று உணர்ந்ததுபோல் மௌனமானார்.

"சொல்லுங்க. எனக்கு யார்னு தெரிஞ்சாகணும்."

"இல்லை. அது யாருன்னு உனக்குத் தெரிஞ்சு ஏதும் ஆகப் போறதில்லை. அதாவது அது உனக்குத் தெரிஞ்ச ஆளில்லை" என்று உளற ஆரம்பித்தார்.

"எதையோ மறைக்கறீங்கன்னு தெரியுது. உண்மையைச் சொல்லுங்க. இந்த அமெரிக்கப் பயணத்துல அந்த தரித்திரம் பிடிச்ச குடும்பத்தைச் சேர்ந்த யாருக்கும் பங்கில்லைன்னு தெரிஞ்சாகணும். இல்லைன்னா என் மகள் அமெரிக்காவே போக வேண்டாம்னு சொல்லிடுவேன்."

"முட்டாள் தனமா பேசாதே. இது உன் மாப்பிள்ளையின் எதிர்காலம் சம்பந்தப்பட்டது. நீயே சொன்னால் கூட உன் மகள் சரிதான் போம்மான்னு சொல்லிடுவா" என்று சீண்டிப் பார்த்தார் ஈஸ்வரமூர்த்தி.

"அவளை அமெரிக்கா போக விடாமல் எப்படித் தடுக்கறதுன்னு எனக்குத் தெரியும். நீங்க யாரும் சொல்லலைன்னா நானே சிந்துவுக்கு போன் பண்ணிக் கேட்டுக்கறேன்" என்றாள் ஆவேசமாக.

ஈஸ்வரமூர்த்தி பதறிப்போக, "அடடா! என்னம்மா நீ. எது எதையோ கற்பனை பண்ணிட்டுப் பேசற. ஆக்சுவலா அப்பா சொல்ல வந்தது என்னன்னா ஷாம்பவின்னு ஒரு பொண்ணு இருக்கா. என் க்ளாஸ் ஃப்ரெண்டுக்குத் தெரிஞ்சவ. அவள் அண்ணன் அமெரிக்காவில் இருக்கார். அந்த ஷாம்பவி மூலமாகத்தான் இந்த வேலையே மாப்பிள்ளைக்குக் கிடைச்சிருக்கு. அதைப் பற்றி ஆரம்பிச்சா அந்த ஷாம்பவி யாரு என்னன்னு கேட்க ஆரம்பிச்சுடுவியேன்னு தான் அப்பா சஸ்பென்ஸா ஆரம்பிச்சாரு..." என்றான் சூரியா குறுக்கே புகுந்து.

சரோஜா அரை சந்தேகத்துடன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"யாரு? சாந்தினியா?"

"ஷாம்பவி"

"ஏன், அந்த ஷாம்பவி பற்றி என்னிடம் சொல்லத் தயங்கற அளவுக்கு என்ன பிரச்னை? நீ அவளைக் காதலிக்கற மாதிரி ஏதும் நடந்திட்டிருக்கா?"

"அம்மா!" என்று பதறினான் சூரியா.

# 10

"ஐயோ! அப்புறம் என்னாச்சு?" என்ற கேட்டாள் ஷாம்பவி.

"உங்க கிட்ட சொல்றதுக்கென்னங்க? ஆக்சுவலா அம்மாவுக்கு தீபா மீதும் அவங்க குடும்பத்து மேலயும் இருக்கற கோபம் கொஞ்சமும் குறையலை. அது படிப்படியாத்தான் குறையணும். அது வரைக்கும் இந்த உதவியில் தீபாவின் பார்ட் இருக்கறது அம்மாவுக்குத் தெரியாமல் இருந்தா நல்லதுன்னு நினைச்சுத் தான் உங்க பெயரைச் சொல்ல வேண்டியதாப் போச்சு."

"பரவாயில்லை."

"அதுலயும் ஒரு சிக்கல் இருக்கே..."

"என்ன?"

"உங்களைப் பற்றிச் சொன்னதும் அம்மா நீங்க ஒரு கற்பனைப் பாத்திரம்னு நினைச்சிட்டா. இல்லைன்னு காட்டணும். உங்களைப் பார்க்கணும்னு பிடிவாதம் பிடிக்கறா. ஒரே ஒரு தடவை என் கூட என் வீட்டுக்கு வரமுடிந்தால் நல்லாயிருக்கும். ப்ளீஸ்"

"அது ஒருபக்கம் இருக்கட்டும். தீபா மீது உங்கம்மாவுக்கு இவ்வளவு வெறுப்பு இருக்கறது அவளுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"அவங்க வீட்டுக்காவது தெரியுமா?"

சூரியா மௌனம் சாதித்தான்.

"ஸோ அவங்களுக்கும் தெரியாதுன்னு தெரியுது. ஏன் மறைச்சிட்டிருக்கீங்க?"

"தீபாவுக்கு வாழ்க்கை மீது அவநம்பிக்கை வந்திடக் கூடாதேன்னு தான். எப்படியும் ஒருநாள் அம்மாவின் கோபம் ஆறலாம். அது வரைக்கும் காத்திருப்பதைத் தவிர வேறு வழி இருக்கறதா தோணலை ஷாம்பவி."

"அம்மாவின் கோபம் மாறும்னு நம்பிக்கை இருக்கா?"

"கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சிட்டே வருது" என்று சொல்ல நினைத்து சொல்லாமல் "ம்" என்றான்.

ஷாம்பவி கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு "ஓகே. நாளை ஈவினிங் உங்க வீட்டுக்கு வர்றேன்" என்றாள். கூடவே பின் இணைப்பாக "தீபாவிடம் இது பற்றி நீங்க ஏதும் சொல்ல வேண்டாம். நானே பக்குவமா சொல்லிக்கறேன்" என்றாள்.

சூரியாவுக்கும் அதுதான் வேண்டி இருந்தது. இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி அவனுக்குள்.

சரோஜாவுக்கு ஷாம்பவியை மிகவும் பிடித்துப் போனது.

"ஷாம்பவியா? அது என்னம்மா பேரு?" என்று அப்பாவியாகக் கேட்டாள்.

"வடக்கத்திப் பேரும்மா. துர்கா மாதாவின் வேறொரு பெயர்தான் ஷாம்பவி!"

"நல்லா இருக்கு உன்னை மாதிரியே" என்று விரல்களால் திருஷ்டி கழித்தாள் சரோஜா. தன் மகளுக்கு இப்படி ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்ததற்காக நன்றி சொன்னாள். அன்பொழுகப் பேசினாள். விழுந்து விழுந்து உபசரித்தாள். அவளுடைய வீட்டார் பற்றிய விவரங்களை அக்கறையுடன் கேட்டாள். "அடடா! அம்மாவும் அப்பாவும் அமெரிக்காவில் இருக்க நீ தனியாவா இருக்கற? போர் அடிச்சா எப்போ வேணுமானாலும் இங்கே வந்திரும்மா. நான் இருக்கேன் உனக்கு அம்மாவா" என்றாள்.

ஷாம்பவிக்குக் குழப்பமாக இருந்தது. தன் அம்மா குறித்து சூரியா சொல்லி

இருந்ததற்கும் நேரில் சரோஜா நடந்து கொள்ளும் விதத்துக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது.

அவளைப் பொருத்தவரையில் சரோஜா அவ்வளவு கொடுமைக்காரப் பெண்ணாகத் தெரியவில்லை. அப்படியே அவளுக்கு தீபா மீதோ அவளுடைய குடும்பத்தின் மீதோ வெறுப்பும் கோபமும் இருந்தாலும் கூட அவளுடன் கொஞ்ச நாட்கள் பக்குவமாகப் பேசி சரி செய்து விட முடியும் என்றுதான் தோன்றியது.

“அடிக்கடி வந்து போய் இரும்மா” என்று சரோஜா சொன்னபோது “நிச்சயமாக” என்றாள் ஷாம்பவி உறுதிப்பட.

அவளை வழியனுப்புவதற்காக வெளியே வந்த சூரியா “ரொம்ப நன்றிங்க. எங்கே அம்மா சிந்து அமெரிக்கா போறதையே கெடுத்திடுவாளோன்னு பயந்து போயிட்டேன்” என்றான்.

“எப்போ போறாங்க? அடுத்த வாரம் தானே?”

“ஆமாங்க. இன்னும் ரெண்டு நாளில் சிந்துவும் மாப்பிள்ளையும் இங்கே வர்றாங்க. அவங்க வந்ததும் காண்டாக்ட் பண்ணச் சொல்றேன்”

“இன்னொரு விஷயம் மிஸ்டர் சூரியா. தீபாவுக்கு உங்கம்மா பற்றிச் சொல்லி வைக்கறது நல்லதுன்னு எனக்குப் படுது. எதுக்காக மறைச்சிட்டு கண்ணாமூச்சி விளையாடிட்டு இருக்கீங்கன்னு புரியலை”

“சில சமயங்களில் நானும் இதே கோணத்தில் யோசிச்சிருக்கேன். எதுன்னாலும் சிந்து அமெரிக்கா போனப்புறம் பார்த்துக்கலாமே.”

“அதுவும் சரிதான்” என்று விடைபெற்றுப் போனாள் ஷாம்பவி.

அவளை அனுப்பி விட்டு வீட்டினுள் நுழைந்த சூரியாவிடம், “இந்தப் பெண்ணைப் பிடிச்சிருக்காடா?” என்று ஆரம்பித்தாள் சரோஜா.

“அம்மா” என்று அலறினான் சூரியா.

“என்னடா! பெரிய இடமாச்சேன்னு பார்க்கறியா?”

“அம்மா! புரியாமல் பேசாதே.”

“என்னடா புரியணும்? உன் கூட அவள் ஃப்ரீயா பேசறதும் என் கூட பாசமாப் பழகறதும் எல்லாம் எனக்குப் புரிய வச்சிருச்சுடா. ஒண்ணு தெரிஞ்சுக்கோ. இந்த வீட்டுக்கு வரணும்ங்கற எண்ணம் மட்டும் இல்லாமல் அவள் இப்படி மாய்ந்து மாய்ந்து உன் தங்கச்சி புருஷனுக்கு அமெரிக்காவில்

வேலை வாங்கித் தரணும்னு அவசியமில்லை. நீ என்னிடம் சொல்லத் தயங்கினாலும் நான் உனக்கு க்ரீன் சிக்னல் தர்றேன். அவள் எந்த ஜாதியா இருந்தாலும் இந்த வீட்டுக்கு அவள்தான் மருமகள்."

சூரியா தலை மீது கை வைக்காத குறையாக விழித்தான்.

சிந்துவும் நீலகண்டனும் வந்தார்கள். இரண்டு நாட்கள் வீடு தடபுடலாக இருந்தது. அவர்களிடம் சூரியாவும் ஈஸ்வரமூர்த்தியும் ஏற்கெனவே இங்கிருந்த நிலைமையை விளக்கி இருந்ததால் தீபாவைப் பற்றி யாருமே பேசிக் கொள்ளவில்லை.

அடுத்த நாள் ஈஸ்வரமூர்த்தி ஓட்டல் ஒன்றில் நெருங்கிய உறவினர் மற்றும் நண்பர் வட்டாரத்தை மட்டும் அழைத்து சிறிய அளவில் பார்ட்டி ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்.

அந்த பார்ட்டிக்கு சரோஜாவின் வற்புறுத்தலின் பேரில் ஷாம்பவியும் அழைக்கப்பட்டிருந்தாள்.

சிந்துவும் நீலகண்டனும் அவளிடம் பேசிக்கொண்டிருந்தபோது தீபாவைப் பற்றிய பேச்சே எழவில்லை. சரோஜா இல்லாத சமயங்களில் கூட அவர்கள் தீபா குறித்த பேச்சுக்களைத் தவிர்த்ததாகவேபட்டது.

இவர்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து பேசுவதைத் தூரத்தில் இருந்த கவனித்துக் கொண்டிருந்த சரோஜாவுக்கு மிகவும் சந்தோஷம். ஷாம்பவி தன்னுடைய குடும்பத்து அங்கத்தினர்கள் அனைவருடனுமே ஒரே மாதிரியாகக் கலந்து கொள்வது பார்க்கப்பார்க்க அவளுக்குள் மகிழ்ச்சி வெள்ளம்.

"யாரு அது? அந்தப் பொண்ணு புதுசாத் தெரியுது?" என்று கேட்ட சக வயதுப் பெண்ணிடம், "இப்போ சொல்ல மாட்டேன். உங்க எல்லோருக்குமே சீக்கிரம் ஒரு நல்ல செய்தி சொல்லப்போகிறேன்' என்றாள் சூரியாவின் காதுகளில் விழும்படி.

சூரியா இந்த முறை ஷாம்பவியின் பக்கமாகத் திரும்பிய போது அவள் பேரழகுச் சிலையாக இருந்தாள். அவனுடைய உடலுக்குள் ஊறிய புதிய உணர்வு அவனுக்கு நன்றாக இருந்தது.

அடுத்த இரண்டு நாட்களும் சூரியா அதே சிந்தனையில் இருந்தான் கண்களை மூடும்போதெல்லாம் ஷாம்பவி முன் வந்து நின்றாள். அவளுடைய சிரிப்பு, அலட்சியமான பார்வை, உடை அணியும் நேர்த்தி, வெளிப்படையான கலகலவென்ற பேச்சு என்று எல்லாமே கனவுகளாக உலா வந்தன.

ஷாம்பவிக்குள்ளுமே சில குழப்பமான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

"தீபாவை விட உங்களைத் தாங்க எங்களுக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு"

"உங்களைச் சந்தித்தால் மனதில் ஓர் உற்சாகம் ஊற்றெடுக்குது. தீபாவைப் பார்த்து விட்டு வந்தாலே ஏதோ மூன்று நாட்களுக்கு மூடு அவுட் ஆகி விடுகிறது."

"இவருடைய அமெரிக்க வேலைக்கும், எங்கள் பயணத்துக்கும் கரெக்ட்டா பார்த்தா நீங்கதான் காரணம். கொஞ்சமும் சங்கோஜம் இல்லாமல் அந்தப் பெருமையை தீபா எப்படி தனதாக்கிக்கறாங்கன்னு தெரியலை."

"ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே. அம்மா நீங்களும் சூரியாவும் லவ் பண்றதா நினைச்சிட்டிருக்கா."

"சமயத்தில் எங்களுக்குக் கூட அது உண்மையா இருந்தா எவ்ளோ நல்லா இருக்கும்னு தோணுது"

அமெரிக்கா போவதற்கு முன் நேரிலும் போனிலும் சிந்துவும் நீலகண்டனும் அடிக்கடி சொன்ன மேற்படி வாசகங்கள் அவளுக்குள் ஒரு சிந்தனை மாற்றத்தை உருவாக்கத் தொடங்கி இருந்தன.

மூன்றாம் நாள் காலையில் ஷாம்பவியின் வீட்டு வாசலில் நின்று அழைப்பு மணியை அழுத்திக் கொண்டிருந்தான் சூரியா.

கதவைத் திறந்த ஷாம்பவி விழிகளை வியப்புடன் விரித்து, "ஹாய்! என்ன சார் இந்தப் பக்கம்?" என்று கேட்க, "ரெண்டு நாளா உன் ஞாபகமாகவே இருந்தது. ராத்திரில்லாம் தூக்கம் வரலை. நாளை எப்போடா விடியும்; உடனடியாப் போய்ப் பார்த்திட்டு வரணும்னு நினைச்சிட்டிருந்தேன். விடிஞ்சதும் குளிச்சிட்டு ஓடி வந்திட்டேன்" என்றான் பளிச்சென்று.

ஷாம்பவி கண்கள் செருகி தான் காதல் வயப்பட்டதைத் தெரிவித்தாள்.

# 11

இந்தப் பார்ட்டி விஷயம் நான்கு நாள் கழித்து வேலாயுதத்துக்குத் தெரிய வந்தது.

முதன் முறையாக அவர் மனத்துக்குள் ஒரு சந்தேகப் புள்ளி விழுந்தது.

உறவினர்கள் பலரும் அடிக்கடி வந்து வந்து அன்பாகவும் எச்சரிக்கை

யாகவும் சொல்லிப் போன விஷயங்களில் கொஞ்சமாவது உண்மை இருக்குமோ என்று மனம் அச்சப்பட ஆரம்பித்தது.

"என்னங்க, ஒரே ஒரு தடவை சம்பந்தி வந்து தைரியம் சொல்லிப் போனார். அதுக்கப்புறம் ஒரு தொடர்பும் இல்லையே. நீங்களும் சும்மா உட்கார்ந்திருந்தா எப்படி? பொண்ணு வீட்டுக்காரங்க நாம்தான் கொஞ்சம் இறங்கிப் போகணும். நீங்க போய் என்ன ஏதுன்னு விவரம் கேட்டு வந்திடுங்களேன் என்று சுகுணாவும் தூண்டி விட்டாள்.

பெண்ணைப் பெற்ற ஆதங்கம் அவளுக்கு.

"பையனைப் பறி கொடுத்த துக்கம் போகட்டும்னு தான் இத்தனை நாள் காத்திருந்தேன். அவங்க பொண்ணு அமெரிக்கா போகுதுன்னு பார்ட்டி வைக்கறாங்க. நமக்கு ஒரு சம்பிரதாய அழைப்பு கூட இல்லைன்னா பயமாத்தான் இருக்கு" என்றபடி செருப்பு மாட்டிக் கொண்டு படி இறங்கினார் வேலாயுதம்.

அவரைப் பார்த்த மாத்திரத்தில் சரோஜாவுக்குள் மீண்டும் வேதாளம் புகுந்து கொண்டது.

"எதுக்கய்யா நீங்க எங்க வீட்டையே சுத்திச் சுத்தி வர்றீங்க? நாங்க தான் உங்க சங்காத்தமே வேண்டாம்னு தானே இருக்கோம்? அதான் உங்க கூட சம்பந்தம் பேசின பாவத்துக்குத் தலைப்பையனைப் பறிகொடுத்திட்டு என் பெத்த வயிறு எரியறது போதாதா? இன்னும் இந்தக் குடும்பத்தையே அடியோட நாசம் பண்ணிட்டுத்தான் விடறதா உத்தேசமா?" என்று ஆரம்பித்துப் பேசிக் கொண்டே போனாள்.

இந்த மாதிரியான ஒரு வரவேற்பை சற்றும் எதிர்பார்க்காத வேலாயுதம் ஆடிப்போனார். சரோஜா பேசப்பேசத்தான் அவருக்கு அந்த வீட்டில் மற்ற எல்லோரும் பல விஷயங்களை ரகசியமாகவே செய்து வந்தது புரிந்தது.

எங்கோ வெளியே போயிருந்த ஈஸ்வரமூர்த்தி அப்போதுதான் வீட்டினுள் நுழைந்தார்.

"வாங்க சம்பந்தி! உட்காருங்க. ஏன் நிக்கறீங்க?" என்றார் பதற்றத்துடன்.

"நில்லுங்க. என்ன சொன்னீங்க? சம்பந்தியா? யாரு? இந்த் தரித்திரமா?"

"சரோஜா" என்று குரல் உயர்த்தினார் ஈஸ்வரமூர்த்தி. "கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேசு. வீட்டுக்கு வந்த விருந்தாளி கிட்ட பேசற லட்சணமா இது? முதல்ல உள்ளே போ நீ!"

"விருந்தாளியா? இந்த ஆள் சைத்தான். என் வம்சத்தையே அழிக்க வந்துள்ள எமன்" வெறி பிடித்தாற்போல் கத்தினாள் சரோஜா.

"சரோஜா!"

"ஏன் கத்தறீங்க? பார்த்தீங்களா? இந்த ஆள் நம் வீட்டு வாசலில் காலடி எடுத்து வச்சான். நமக்குள்ள சண்டை ஆரம்பிச்சாச்சு. ஏன்யா, சந்தோஷம் தானே உனக்கு? எங்க வீட்டை இன்னும் என்னதான் பண்ணறதா உத்தேசம்?"

வேலாயுதத்தின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர்.

"நிறைஞ்ச வீட்டுல வந்து நடையில் நின்னுட்டு ஆம்பளை அழுதா வீடு விளங்குமாய்யா? போய்த் தொலையேன்."

வேலாயுதம் கையெடுத்துக் கும்பிட்டார்.

ஈஸ்வரமூர்த்தி ஆவேசமானார். "நீங்க அழாதீங்க சம்பந்தி. அவ கிடக்கா. நானும் கொஞ்சம் நாளானா சமாதானமாயிடுவாள்னு பொறுத்துப் பொறுத்துப் பார்த்திட்டேன். இந்தப் பிசாசு அடங்கறதாத் தெரியலை. அவள் யாரு சொல்றதுக்கு? நானும் சூரியாவும் எப்பவோ தீர்மானிச்சாச்சு. தீபா தான் இந்த வீட்டு மருமக. அதை மாத்த எந்தக் கழுதையாலும் முடியாது" என்றார் உயர்ந்த குரலில். அவருடைய உடலும் முகமும் சதைகளும் 'துடிக்கத் தொடங்கின.

"உங்களுக்கு இப்படி வேற நினைப்பு இருக்கா? சூர்யா எப்பவோ மனசு மாறியாச்சு. அன்னிக்கு வந்தாளே ஷாம்பவி... அவளைத்தான் அவன் கட்டிக்கப் போறான். அவள்தான் இந்த வீட்டு மருமகள்!"

இந்த அஸ்திரம் பிரம்மாஸ்திரமாகப் பாய்ந்தது ஈஸ்வரமூர்த்தி மீது ஏற்கெனவே நீண்ட நாட்களாக தீபாவின் இந்த நிலைக்குக் காரணம் தானே என்கிற குற்ற உணர்வு, கொஞ்சம் கூட தன் உணர்வுகளுக்கு மதிப்புத் தராத மனைவி, மலை போல் நம்பி இருந்த மகன் கைகழுவி விட்டானே என்கிற அதிர்ச்சி, இந்தக் குடும்பத்துக்கு நல்லது செய்த தீபாவுக்கு மீண்டும் துரோகம் இழைக்கிறோமே என்கிற கவலை, கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே என்கிற ஆதங்கம், எல்லாவற்றிற்கும் மேலாக அந்நிய ஆணின் முன் னிலையில் தன்னைத் தூக்கி எறிந்து துச்சமாக இழிவு செய்கிறாளே மனைவி என்கிற கையாலாகாத நிலை எல்லாவுமாக சேர்ந்து ஒரே நேரத்தில் அழுத்த-

சட்டென்று அவருக்கு வாய் கோணியது. இடது கையும் காலும் இழுத்துக் கொள்ளத் தொடங்கின. அப்படியே மயங்கிக் கீழே விழுந்தார்.

பக்கவாதம்!

"சம்பந்தி" என்று அலறியவாறு அவரைத் தூக்கப் போன வேலாயுதம் "டேய்" என்கிற சரோஜாவின் அலறலில் மிரண்டு போய் நின்றார்.

"என் மகன் உயிரைப் பறிச்ச. இப்போ என் தாலிக்கே உலை வைக்க வந்திட்டயா? உனக்கு ஏதாவது மானம் வெட்கம் சூடு சொரணை எல்லாம் இருந்ததுன்னா இந்த இடத்தை உடனே காலி பண்ணு. எங்க மூஞ்சிலயே முழிக்காதே. மீறி ஏதாவது அழிச்சாட்டியம் பண்ணின, நான் கொலைகாரியா மாறவும் தயங்க மாட்டேன்..."

வேலாயுதம் நொந்து நூலாக வெளியே வந்தார்.

# 12

தீபாவுக்குக் கொஞ்ச நாட்களாகத் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே புரியவில்லை.

அவளுடைய குழப்பத்துக்கு முதல் காரணம் சிந்துவும் அவள் கணவனும் ஒரு ஃபார்மாலிட்டிக்காகக் கூட அவளை நேரில் சந்தித்துப் பேசாமல் கிளம்பிப் போனது.

அதோடு இவளே வலிய போனில் பேசியபோதும், "உங்களை நேரில் சந்திக்க இயலாத நிலை. விளக்கமாக ஷாம்பவி சொல்லுவாங்க." என்று மட்டும் பேசி விட்டு தொடர்பைத் துண்டித்தது அவளை இன்னும் குழப்பியது. அப்படி என்ன விஷயம்.. எனக்குக் கூடத் தெரியாமல், ஷாம்பவிக்கு மட்டும் தெரிந்தபடி...

அடுத்தபடியான குழப்பம் ஷாம்பவியின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாறுதல். திடீரென்று அவள் நெருக்கத்தைக் குறைத்துக் கொண்டதாகப் பட்டது. பட்டும் படாமலுமான பேச்சு தீபாவைப் பாதிக்க நான் ஏதும் தப்பு செய்து விட்டேனா என்று பலமுறை இறங்கிப் போய் மன்னிப்பு வேண்டாத குறையாகப் பேசிப் பார்த்தும் ஷாம்பவி பிடி கொடுக்காதது வருத்தம் தந்தது. அதோடு, "ரொம்பவும் செண்டிமெண்ட்டலா இருக்காதே தீபா. உன் கூட

கொஞ்ச நேரம் பேசிட்டிருந்தாலே ஐ ஆல்ஸோ ஸ்டார்ட் ஃபீலிங் ஸிக்" என்றாள் ஒருமுறை முகத்தில் அடித்த மாதிரி. என்ன ஆச்சு இவளுக்கு என்ற தீபாவும் ஒதுங்கிக் கொண்டாள்.

"தீபா! இஃப் யூ டோண்ட் மைண்ட் கொஞ்சம் வெளியே போக முடியுமா, எனக்கு பர்ஸனல் கால்" என்று ஷாம்பவியே துரத்தும் படியாக, சில நாட்களாக ஆஃபீஸுக்கு வர ஆரம்பித்திருந்தன தொலைபேசி அழைப்புகள்.

யாராக இருக்கும்? என்று தீபா சிந்திக்கத் தலைப்படாவிட்டாலும் கூட அடுத்த முனையில் இருப்பது சூரியாதான் என்பது அவளுக்குத் தெரியத் தொடங்கி இருந்தது.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் அப்பா ஒரு நாள் "இனியும் அந்த வீட்டுக்கு மருமகளா போகப் போகிறோம்ங்கிற கனவு உனக்குள் இருந்தால் அதை அடியோட அழிச்சுக்கோம்மா" என்று சொன்னது.

அவள் காரணம் கேட்ட போது சொல்ல மறுத்து விட்டார்.

அடுத்த ஓரிரு நாட்களில் ஈஸ்வரமூர்த்திக்கு பக்கவாதம் வந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவசரமாக சூரியாவுக்கு போன் செய்தாள்.

"ஆமாம். இப்போ தேவலை. இன்னும் ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியிருக்கும்னு டாக்டர் சொல்லி இருக்கார்" என்றான் சாதாரணமான குரலில்.

"ஏன் எனக்குச் சொல்லவே இல்லை சூரியா?"

அவன் பக்கத்தில் மௌனம்.

"நான் அவரைப் பார்க்கணும் சூரியா. நான் வரலாமா?"

"வேண்டாம்" பளிச்சென்று வந்தது பதில்.

"ஏன்?"

"வெல். உன்கிட்ட ஓப்பனா சொல்ல வேண்டிய கட்டம் வந்திட்டதுன்னு நினைக்கறேன். ஐ'ம் சாரி தீபா. அப்பா இப்படி ஆனதுக்குக் காரணமே நம்ம கல்யாணம் பற்றி உங்கப்பா பேச வந்ததுதான். அம்மா எக்காரணம் கொண்டும் நம்ம கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டாள்னு தோணுது. அவளைப் பகைச்சுக்கிட்டு நம் கல்யாணம் நடக்கறது நல்லதாப்படலை. அதோட உனக்கும்

அப்பப்பா அண்ணனோட ஞாபகம் வந்திட்டேதான் இருக்கும். அவனுடைய ஞாபகத்தைச் சுத்தமா அழிச்சிட்டு எங்க வீட்டில் நீ வாழறது நடைமுறை சாத்தியமில்லை. எனக்கும் நீ அண்ணிதானே என்கிற எண்ணம் அவ்வப்போது வந்துவிடுகிறது. இது நம்ம உறவுக்கு ரொம்ப டிஸ்டர்பிங் ஃபேக்டராக இருக்கும்னு தோணிச்சு. ஆற அமர யோசித்துப் பாரு. நான் சொல்றதெல்லாம் நியாம்னு உனக்கே புரியும். அதனால் நாம் இப்படியே மொத்தமா பிரிஞ்சிடறதுதான் ரெண்டு பேருக்கும் - இன்ஃபாக்ட் இரண்டு குடும்பத்துக்குமே நல்லது. நீ படிச்ச பொண்ணு. இனிமேலும் என்னைத் தொந்தரவு செய்யமாட்டாய்னு நம்பறேன். உன்னுடைய ஃப்யூச்சருக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். குட் பை."

தீபா ரிஸீவரை காதில் இருந்து எடுக்க மனமில்லாமல் உறைந்து போய் இருக்க, மறு முனையில் இருந்து, "வெரிகுட்" என்று ஒரு குரல் டெலிஃபோன் தொடர்பு துண்டிக்கப்படும் முன் கடைசியாக மெல்லக் கேட்டது. அது ஷாம்பவியின் குரல் என்பது தீபாவுக்கு உறைக்காமல் இல்லை.

தீபாவுக்கு இம்முறை அழுகை வரவில்லை.

லேசாகத் தலையை வலித்தது? சூடாகக் காபி குடிக்க வேண்டும் என்று தோன்றியது. தனியே எழுந்து காண்டீனுக்குப் போனாள்.

# 13

வேலாயுதத்தால் சும்மா இருக்க முடியவில்லை. வஞ்சிக்கப்பட்டு விட்டோமோ என்கிற சுய இரக்கம் ரொம்பவும் அழுத்தியது. எப்படியாவது என் மகளுக்கு அந்தப் பொம்பள கண் முன்னால் நல்ல இடத்தில் கல்யாணம் செய்துவைத்து வாழ வைப்பேன் என்று மனதினுள் கருவிக் கொண்டார்.

நினைவின் ஓரத்தில் திடீரென்று மாரியம்மன் கோயில் தெரு ராமநாதன் வந்து போனார்.

அவரிடம் ஓடினார் - தீபாவின் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு.

"அடடா! பையனுக்குக் கல்யாணம் ஆயிடுச்சே" என்றார் அவர்.

"ரொம்ப சந்தோஷம் சார். ஆனா பத்திரிகை கூடத் தரலையே நீங்க.

மறந்திட்டீங்களா?" என்று கேட்டார் வேலாயுதம் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு.

ராமநாதன் அதற்கு நேரடியாக பதில் சொல்வதைத் தவிர்த்தார். உட்கார வைத்து காபி தந்தார். "நாம் சம்பந்தியா இல்லாவிட்டாலும் குடும்ப நண்பர்களாக இருக்கலாமே. கட்டாயம் உங்க வீட்டுல கூட்டி வாங்க" என்று அன்பாய்ச் சொன்னார்.

வேலாயுதம் விடை பெற்று வெளியே வந்தபோது அவருடனேயே கொஞ்ச தூரம் வந்த ராமநாதன், "நீங்க தப்பா எடுத்துக்கலைன்னா நான் ஒண்ணு சொல்ல ஆசைப்படறேன்" என்றார்.

வேலாயுதம் இப்போது எந்தப் பேச்சையும் தப்பாக எடுக்கும் நிலையில் இல்லையே!

"சொல்லுங்க."

"உங்க பொண்ணு ஜாதகம் கரெக்ட் தானான்னு பாருங்க. ராசியில்லாத பொண்ணா இருக்கு. எதுக்கு சொல்றேன்னா ஒரு பையன் இறந்து போயிட்டான். இரண்டாவது பையனைத் தர்றேன்னு சொன்னவர் பரலிட்டிக் அட்டாக்கில் விழுந்திட்டார். இவ்வளவு ஏன்? அன்னிக்கு உங்ககிட்ட ஆஃபீஸ்ல பேசிட்டு வர்றேன், என் பையன் ஒரு கீழ் ஜாதிப் பெண்ணை ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணிட்டேன்னு வந்து நிக்கறான். என்ன சொல்றதுன்னே தெரியலை. நீங்க என்னன்னு பாருங்க. எதாவது பரிகாரம் அது இதுன்னு எதாவது இருக்கும். எனக்குத் தோன்றியதைச் சொல்லிட்டேன்."

வேலாயுதம் வீட்டுக்கு வந்து ஓவென்று கதறி அழுதார். "என் கண்ணே! உன்னைப் பற்றி இப்படியெல்லாம் பேச ஆரம்பிச்சுட்டாங்களே! நான் என்னம்மா செய்வேன்? ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு இருக்கற உனக்கு ஒரு நல்லது செஞ்சு பார்க்காமலே கண்ணை மூடிடுவேனோன்னு பயம்மா இருக்கும்மா..."

தீபா தீர்மானமாக எழுந்தாள்.

"எங்க மானேஜர் சாந்தாராம் சாரைப் பார்த்திட்டு வர்றேம்பா.."

அவளுடைய நிலையை விளக்கிய மாத்திரத்தில் அவள் கேட்ட தொலை தூர ஊருக்கு டிரான்ஸ்ஃபர் செய்து தர மனமில்லாமல் ஒப்புக் கொண்டார் அவர்.

மாலைமதி 19.08.2002

"எல்லாம் கேள்விப்பட்டேம்மா. ஷாம்பவி இப்படி மாறுவாள்னு நினைக்கவே முடியலைம்மா. அவள் உனக்குச் சொல்லியிருக்க வாய்ப்பில்லை. அவளுக்கும் அந்த சூரியாவுக்கும் அடுத்த பத்தாம் தேதி நிச்சயதார்த்தமாம்."

# 14

ரயில் சீரான தாளகதியில் ஓடிக் கொண்டிருந்தது. வீர்ரென்ற மின் விசிறிகளின் சத்தமும், அவ்வப்போது யாராவது இருமும் சத்தமும் சிலருடைய குறட்டைச் சத்தமும் தவிர மற்றபடி நிசப்தம். மினுக்கிக் கொண்டிருந்த விடிவிளக்கு வெளிச்சத்தில் நடுநடுவே யாராவது எழுந்து தூக்கக் கலக்கத்தில் தள்ளாடியபடியே பாத்ரூம் போய்வருவது தெரிந்தது.

வேலாயுதம் தூக்கம் வராமல் புரளவும் முடியாமல் நிமிர்ந்த வாக்கில் வெறித்துக் கொண்டிருந்தார். பக்கத்து லோயர் பர்த்தில் தீபா அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது.

"ஆஃபீஸ்லயும் அக்கம்பக்கத்துலயும் துக்கம் விசாரிச்சே கொல்றாங்களேம்மா..."

"வெல். டிரான்ஸ்ஃபருக்கு அப்ளை பண்ணுங்கப்பா. ஒரு மாறுதலுக்காக வேற ஊருக்குப் போயிடலாம்."

"தீபா..."

"வாழ்க்கை ரொம்ப நீளம்ப்பா. இதுவரை பலவருஷங்கள் அழகா அமைதியா வாழ்ந்திருக்கேன். இன்னும் பல வருஷங்கள் வாழ வேண்டி இருக்கு. இவ்வளவு பெரிய கால கட்டத்தை இடையில் வந்த சில நாட்கள் கெடுத்து விடுவதற்கு நான் அனுமதிப்பதாக இல்லை. இனி வரும் நாட்களின் சந்தோஷத்தை, கண்ட கவலைக் குப்பைகளால் நானே கெடுத்துக்கறதா இல்லை" என்றாள் உறுதிப்பட.

வேலாயுதத்துக்கு ஆறுதலாக இருந்தது.

"டிரான்ஸ்ஃபர் எனக்கு ஏற்கெனவே இருக்கும்மா. உன் கல்யாணத்தைக் காரணம் காட்டித்தான் ஒத்திப்போட்டுட்டு வந்தேன். இப்போ எழுதிக் கேட்டாலும் ஒரே மாதத்தில் கிளம்பிவிடலாம்" என்றார் வேகம் பெற்றவராக.

"தட்ஸ் ஆல். பிரச்னை முடிஞ்சதா? யாரும் யாரையும் ஏமாத்திட்டதா

நான் நினைக்கலை நான். அவரவர் கோணத்தில் அவரவர் போக்கு சரியே. மகனைப் பறிகொடுத்த ஏக்கத்தை யார் மீதாவது சுமத்துவதில் அந்தம்மாவுக்கு ஒரு ஆறுதல் கிடைத்தது. வாலிப வயசுக் காதல் உணர்வுகளின் வடிகாலுக்கு சூரியாவுக்கு உரிமைப்பட்ட ஒரு பெண் தேவைப்பட்டது. ஷாம்பவி இறங்கி வரும் வரையில் நான் இடைக்கால நிவாரணமாக இருந்தேன். இடையில் சிந்துவுக்கு ஓர் உதவி செய்ய முடிந்தது. இவை எல்லாம் செய்வதற்கு நான் எந்த விதத்திலும் கஷ்டப்படவில்லையே. எனக்கும் ஒரு திருப்தியும் கர்வமும் இருந்ததை மறுப்பதற்கில்லையே. அவ்வளவுதான். விளையாட்டு முடிந்தது. வாழ்க்கையில் நிறையப் பேர் வருவார்கள், போவார்கள். சுமையாக உணர்ந்தால்தான் பயணம் கடினம். இல்லையாப்பா?"

மகள் விரக்தியாகப் பேசவில்லை. தெளிவாகப் பேசுகிறாளென்று தெரிந்தது. பெண் பிள்ளைகள் கூரிய புத்தி உள்ளவர்கள். நாம்தான் குழந்தை குழந்தை என்று பாச வேஷம் காட்டி அடக்கி வைத்துக் கொள்கிறோம் என்று பட்டது. அவர்கள்தான் ஞான ஊற்று..அன்புப் பெருங்கடல். அலட்டிக் கொள்ளாத அறிவு தீபங்கள். அதனால்தான் குழந்தையாக இருப்பதில் இருந்து சாகும் தருவாய் வரையில் ஆண் ஆறுதல் என்று தேவைப்படும்போதெல்லாம் ஏதாவது ஒரு உருவத்தில் பெண்ணின் அண்மையை நாடுகின்றானோ? இப்போதுகூட என் மகளுக்கு நான் ஆறுதலா? எனக்கு அவள் ஆறுதலா?

பெண்ணுக்கு எப்படி ஆறுதல் சொல்லப் போகிறோம் என்று குழம்பிக் கொண்டிருந்த தன் அறியாமையை நொந்து கொண்ட வேலாயுதம் அவளால் ஆறுதல் பெற்றவராக சுறுசுறுப்பாக எழுந்தார், தன்னுடைய பணியிட மாறுதல் குறித்துப் பேசுவதற்காக.

காலை விடியலில் அந்த ரயில் அவர்கள் இறங்க வேண்டிய ஊருக்குள் நுழைந்து நின்றது.

அப்பாவும் மகளும் கௌரவமான லாட்ஜ் ஒன்றில் அறை எடுத்தார்கள். குளித்துக் கிளம்பினாள் தீபா. அப்பாவிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டாள்.

அலுவலகம் சென்று புது மேனேஜரிடம் தன் ஜாயினிங் ரிப்போர்ட்டை சமர்ப்பித்தாள். சம்பிரதாய வாழ்த்துக்களுடன் அவர் அவளை கம்ப்யூட்டர் ரூமுக்கு அனுப்ப, புதிய இடம் புதிய ஆட்கள் புதிய நண்பர்கள் புதிய வாழ்க்கை என்கிற லேசான அயர்ச்சியுடன் நடந்து அந்த அறையின் கதவைத் திறந்தாள் தீபா.

"வாங்க மேடம்!" என்று வரவேற்றாள் ஷாம்பவி.

# 15

"ஷாம்பவி!" என்று கூவினாள் தீபா, ஒரு கணம் எல்லாம் மறந்த உற்சாக மேலீட்டில்.

ஷாம்பவி அமைதியாகப் புன்னகைத்தாள்.

"சாரி! உன்னுடைய நிச்சயதார்த்தம் பற்றிக் கேள்விப்பட்டேன். நீ என்னை அழைக்காததால் வருவதற்குக் கூச்சமாக இருந்தது. அதோடு..."

"அதோடு?"

"என்னுடைய ராசியில்லாத தன்மை உன்னைப் பாதித்து விடக் கூடாதேன்னுதான் வரலை. என் வாழ்த்துக்கள். ஆமா நீ எங்கே இப்படி?"

"அடிப்பாவி! இத்தனைக்கப்புறமும் என்னைத் திட்டணும்; என் மீது ஆவேசப்படணும்னு தோணலியா உனக்கு? எப்படிடி சாதாரணமாப் பேசற?"

தீபாவின் கண்களில் நீர் தளும்பி நின்றது.

"நோ தீபா! நீ அழுத காலம் எல்லாம் முடிஞ்சாச்சு. இனி அடுத்த பாகம். உன்னைப் பிரிஞ்சு எப்படி என்னால் இருக்க முடியும்? அதான் இங்கேயே டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வந்திட்டேன்."

"நிச்சயதார்த்தம்?"

"அதெல்லாம் நல்லபடியா முடிஞ்சது."

"சந்தோஷமா இருக்கு. என்னால் நம்பவே முடியலைடி. இத்தனை நாள் சம்பவங்களில் எதையுமே நான் இழப்பாக நினைக்கவில்லை உன்னைத் தவிர. நீ கூட என்னை சரியாப் புரிஞ்சுக்காமல் ஒதுக்கிட்டயேன்னு வருத்தப்பட்டிருக்கேன். அந்த சூரியாவை உனக்குப் பிடிச்சிருந்தா அவரும் உன்னை விரும்பினால் நான் எப்படி அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பேன்னு நீ எதிர்பார்த்த? என்னை விட நீதான் அவருக்குச் சரியான பொருத்தம்னு நானே உணர்ந்திருக்கேன். எவ்வளவு தூரம் உயிருக்குயிராய் இருந்த நீ இப்படி ஒரு சந்தேகத்தில் விலகிப் போறியேன்னு சங்கடப்பட்டேன். உனக்கு மேலும் சங்கடம் தர வேண்டாம்னுதான் அங்கிருந்தே கிளம்பினேன். என்னை ராசியில்லாதவள்னு எல்லோரும் சொன்னப்போ கூட, அது சரிதான் அதனால்தான் உன்னை

இழந்திட்டேன்னு கூட நம்பிக்கை இழந்து அழுதேண்டி.."

'எவண்டி உன்னை ராசியில்லாதவள்னு சொன்னா? உன் வாழ்க்கைல மூணு ஆம்பளைங்க குறுக்க வந்தாங்க. முதல் ஆள் பக்கத்துல நீ உட்கார்ந்த. நீ விதவையா வாழாவெட்டியான்னே தெரியாத நிலைக்குத் தள்ளப்பட்ட. ரெண்டாவதா ஒருத்தன் கல்யாணம் பண்ணிக்கறேன்னு கொஞ்ச நாள் சுத்தினான். உன் உயிருக்குயிரான தோழியே உனக்கு துரோகம் பண்ணற மாதிரியான சூழ்நிலை ஆகிப்போச்சு. மூணாவதா ஒருத்தன் சார்பில் அவங்கப்பா ஜாதகம் கேட்டார். நீ அவ்ளோ நாள் வசித்த ஊரையே விட்டுட்டு மாறி வர்ற மாதிரி ஆயிடுச்சு. ராசியில்லாதவ நீயா? அவனுகளா?"

தீபா அவள் சொல்வது புரியாமல் அவளைப் பார்த்தபடியே இருந்தாள்.

எனக்கு உன் சாந்த சொரூபம் தெரியும். உன்னுடைய அப்பாவித்தனத்தை அந்த வீட்டு ராஸ்கல்கள் எப்படில்லாம் உபயோகப் படுத்திக்கிட்டாங்க. உன் மீது கொஞ்சமாவது நன்றி காட்டினாங்களா? அவங்களுக்கெல்லாம் தண்டனை வேண்டாம்?"

"ஏய்! என்ன சொல்ற நீ? ஏதோ பொடி வச்சுப் பேசற மாதிரி தெரியுது."

ஷாம்பவி சிரித்தாள். "பொடிதான். சாதாரணப் பொடியில்லை. கந்தகப் பொடி. அவங்க அத்தனை பேரையும் பொசுக்கி இருக்கிற பொடி!"

"ஷாம்பவி! என்ன பண்ணியிருக்க?" என்று அவளை உலுக்கினாள் தீபா.

"பயப்படாதே. நான் ஒண்ணும் கொலை எல்லாம் பண்ணலை. அவங்க எப்படி உன் மனசைக் கொன்னாங்களோ அதுக்கு பதில் கொடுத்திருக்கேன். அவ்வளவுதான்."

"அவங்க மேல என்னடி தப்பு? எல்லாம் என் நேரம்."

"இப்படித்தான் எதாவது சொல்லி நீ ஒதுங்கிட்டன்னு தெரியும். அதான் நானே தண்டனை கொடுத்திட்டேன். அதுக்கான மேடைக்காகத் தான் நிச்சயதார்த்தத்துக்கே சம்மதித்தேன். பொம்பளையா அவ அந்த சரோஜா? புருஷனோட உடல் நலம் பற்றிக் கொஞ்சமாவது அக்கறை இருந்தா அப்படி ஒரு அவசர நிச்சயதார்த்தத்துக்கு சம்மதிப்பாளா? அவளுக்கா தன் மூத்த மகன் மேல பாசம்னு நினைக்கற? அவள் மனிதப் பிறவியே இல்லை. பூதகி. பணப்பிசாசு."

"ஐயோ! நீ என்னதான் பண்ணின?"

"நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் ரகளை பண்ணிட்டேன். அந்த ராட்சசி சரோஜா தன் வாழ்நாள் முழுசுக்கும் அதை மறக்க மாட்டா. இனிமேல் அவள் தலை நிமிர்ந்து நடந்தால் அல்லவா பேசறதுக்கு? இனிமேல் எவன் அந்த சூரியாவுக்குப் பொண்ணு கொடுப்பான்னு தெரியலை. அப்படியே எவனாவது கொடுத்தாலும் அவனால சந்தோஷமா தன் மனைவியை ஒரு நாளும் தொட முடியாது. அப்படி ஒரு ஷாக் கொடுத்திருக்கேன். எல்லாவற்றுக்கும் மேலாக இப்போ அந்த நன்றி கெட்ட நீலகண்டனுக்கு அமெரிக்காவில் வேலை போயாச்சு. அவளும் சிந்துவும் இப்போது நடுத்தெருவில்" என்று குரலெடுத்துச் சிரித்தாள் ஷாம்பவி.




அட்டையில்:
ரீமாசென்

"பாவி! இப்படி எல்லாமா செய்வ? நோ ஷாம்பவி. தப்பு" என்று கண்டித்தாள் தீபா.

"நீ இப்படித் தடுப்பன்னு தெரியும். அவங்க ஒவ்வொருத்தரோட சுயநலத்தையும் அங்குலம் அங்குலமா பக்கத்தில் இருந்து பார்த்தவள் நான். உன்னுடன் கூட்டணியில் இருந்தா என்னை நீ ஒண்ணும் செய்ய விடமாட்டன்னுதான் பிரிஞ்சேன். ஓகே. என்னுடைய மிஷன் எல்லாம் ஓவர். இப்போ குளிர்ந்து வந்திருக்கேன். வா. இப்போதைக்கு எதாவது குடிக்க வாங்கிக் கொடு"

"உன் பெயருக்கும் நீ செஞ்சிருக்கற செயலுக்கும் பொருத்தமா உனக்கு ரத்தம்தான் வாங்கிக் கொடுக்கணும் குடிக்க" என்று சிரித்தாள் தீபா.

அவளுடைய கழுத்தைக் கடிக்கப் பாய்வது போல் பாவனை செய்தாள் ஷாம்பவி!

**முற்றும்**